# செந்தமிழ்

தொகுதி : 97 திருவள்ளுவர் ஆண்டு 2034 மார்ச் 2003 பகுதி :3

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம்
* THE MADURAI TAMIL SANGAM *

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

# தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. சோ. இராமகுரு | உறுப்பினர் |

# கல்லூரிக்குழு

| | |
|---|---|
| டாக்டர்.திரு.என்.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல் | செயலாளர் |
| திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்., | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ. | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. சோ.இராமகுரு | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. செ.கந்தசாமி, பிஎச்.டி., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. க.சின்னப்பா, பி.எச்.டி., | உறுப்பினர் |
| டாக்டர்.திருமதி. கிரிஜா பிரியதர்சினி பிஎச்.டி.,டிப்.லிட்.,பி.ஜி.டிப்., ஜர்னலிசம் | உறுப்பினர் |

# செந்தமிழ்

தொகுதி : 97 திருவள்ளுவர் ஆண்டு 2034 மார்ச் 2003 பகுதி :3

## திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம் • THE MADURAI TAMIL SANGAM •

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

# பொருளடக்கம்


இதழ் மணம் - 77

மணிமேகலை மூலமும் - 79

'ஆயர்' சொல்லாய்வு - 80

*பேராசிரியர் டாக்டர். அ.தட்சிணாமூர்த்தி*

திருவெம்பாவை பாடல் எண் 10 - 89

*பேராசிரியர் சுப.அண்ணாமலை*

ஔவையார் - 92

*பேரறிஞர். நா. பாலுசாமி*

# இதழ் மணம்

தமிழ்த்தாத்தா உ.வே.சா. முதன்முதலாக அச்சிட்டு வெளிவந்த "மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும்" என்னும் நூலைப் படிக்க வேண்டுமென்னும் வேட்கையால் பலவிடங்களில் தேடியும் கிடைக்கவில்லை; இறுதியாக மதுரைத்தமிழ்ச் சங்கத்தில் சிதிலமடைந்த நிலையில் பார்க்க நேர்ந்தது. அந்நூல் 1898ல் இன்றைக்கு 105 ஆண்டுகளுக்கு முன்பு மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்குவதற்கு முன்பு பாண்டித்துரைத் தேவரவர்கள் பொருளுதவியால் வெளியிடப்பட்டுள்ளது. உ.வே.சா முன்னுரையில் வள்ளலின் தண்ணளியும் பெருந்தகைமையும் ஒருபொழுதும் மறக்கற்பாலனவல்ல மிகவும் பாராட்டற்பாலன என்று குறிப்பிடுகின்றார். இதைப்போன்ற எத்தனையோ பெரிய காரியங்களைத் திருத்தமாகச் செய்து நிறைவேற்றியவர்களின் வழித்தோன்றல் என பாண்டித்துரைத் தேவரைக் குறிப்பிடுவது ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும். வழிவழியாகப் பாண்டித்திய மடைந்து நூலாராய்ச்சியே இன்பத்துளின்பமெனக் கொண்டு வாழும் குடிமரபு என உ.வே.சா வியந்து போற்றிப் பாராட்டுகின்றார். அத்தகைய சான்றோர்கள் பாண்டித்துரைத் தேவரும் உ.வே.சாவும். இவ்விரு பெரும் சான்றோரும் வழங்கிய அருங்கொடை மணிமேகலை நூலாகும். ஆனால் அதற்குப்பின்பு வெளிவந்த பதிப்புக்களில் உ.வே.சா அரிதின் முயன்று எழுதிய ஆராய்ச்சி முன்னுரை நூற்றுக்கணக்கான பக்கங்கள் அச்சிடப்படவில்லை. முன்னுரை பெரிதாக இருக்கிறது என்பதால் பின்வந்த மணிமேகலைப் பதிப்புக்களில் உ.வே.சா எழுதிய பௌத்த சமயத்தைப் பற்றிய மணிமேகலையோடு தொடர்புடைய செய்திகள் விடுபட்டுள்ளன. உ.வே.சாவின் முன்னுரையின் மதிப்பை அறிஞர் அறிவர். மீண்டும் முழுமையாக உ.வே.சாவின் முன்னுரையோடு மணிமேகலை வெளிவர வேண்டுமென்பது தமிழ் தாயின் விருப்பமாகும்.

முனைவர் அ.தட்சிணா மூர்த்தி அவர்கள் "ஆயர் சொல்லாய்வு" என்னும் தலைப்பில் நவம்பர் செந்தமிழ் இதழில் வந்த கட்டுரையை ஒட்டி இக்கட்டுரையை எழுதியுள்ளார்கள். ஆய்வு என்பது ஆசிரியரும் மாணவரும் உண்மை காண்பதற்கான முயற்சியேயாகும். ஒன்றனை ஏற்பதும் மறுப்பதும் ஆய்வு நெறி முறையின் படிநிலையேயாகும். இத்தகைய மீள்பார்வை கட்டுரை பற்றிய திறனாய்வு என்றே கொள்ளலாம்.

பேராசிரியர் சுப.அண்ணாமலை அவர்கள்இறைபணி நிற்கும் அன்புடைத் தொண்டர்களே இறைவன் பரிசுக்குரியவர்கள் என்பதை சுவைபட விளக்கும் நயம் இன்புறற்பாலது.

*பேராசிரியர் நா.பாலுசாமி* அவர்கள் வருகின்ற சூலை திங்களில் எண்பது அகவை நிறைவு எய்துகிறார். தமிழ்ச் சான்றோர்; நல்லிளைஞர்; வாழ்வியல் களஞ்சியம் கண்ட அறிஞர் பண்டை இலக்கியச் செய்திகளைப் புதிய பார்வையோடு கணிக்கும் நற்றமிழ்ப் புலவர், அறிஞர் அப்பெருமகனாருக்குச் செந்தமிழ் தன் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறது. ஔவையார் என்னும் தலைப்பில் அரிய கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். அதன்கண் "மக்களே! மக்கள் தலைவர்களே! உங்கள் நாடும் நகரும் ஊரும் பாரும் உயர்ந்ததா? தாழ்ந்ததா? என்பது உங்கள் கையில் உள்ளது; உங்கள் நடத்தையில் உள்ளது. நீங்கள் நேர்மையாகவும் அறவுணர்வுடையோராகவும், பழிக்கு அஞ்சுபவராகவும், மக்கட் பண்புடையோராகவும் இருந்தால் உங்கள் நாடும் நல்ல நாடாகும்; மாறாக நீங்கள் ஒழுக்கத்திற்கு விடை கொடுத்துவிட்டு, நெஞ்சில் உரமும் நேர்மைத்திறமும் இன்றி, வஞ்சனை செய்வீராகில் நாடு பாழாகும்; மக்கள் நிலைகுலைவர்; கொள்ளை, கொலை, வன்முறை முதலிய சமூகக் கேடுகள் நடனமாடும். விழிமின்! எழுமின்! வாழுமின்! வாழ விடுமின் என்று அறிவுறுத்துகிறார்.

இதுவே அவர்தம் சமுதாய இலக்கியப் பார்வை; கற்று இன்புறுமின்.

பேராசிரியர் டாக்டர் இராமசுந்தரம் M.A Ph D, பெரும்புலவர் க.சண்முகம் செந்தமிழ் வாசகர் குழுவில் சேர்ந்துள்ளது மகிழ்ச்சிதருகிறது. இவ்விருபெரும் அறிஞர்களும் நம் இதழில் கட்டுரை எழுதுகிறார்கள். செந்தமிழ் இருபெரும் ஆசான்களையும் வாழ்த்துகிறது.

**பதிப்பாசிரியர்**

மதுரைக் கூலவணிகன் சாத்தனார் அருளிச்செய்த

## *மணிமேகலை மூலமும்*

கும்பகோணம் கவர்ன்மென்ட் காலெஜ் தமிழ்ப்பண்டிதராகிய

உத்தமதானபுரம்

**வே.சாமிநாதையரெழுதிய**

அரும்பதவுரையும்

இவை பாலவனத்தம் ஜமீன்தாரவர்களாகிய இராமநாதபுரம்

ம-ள-ள-ஸ்ரீ

**பாண்டித்துரைத்தேவரவர்கள்**

உதவியைக்கொண்டு

சாமிநாதையரால்

சென்னை

வெ.நா.ஜூபிலி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.

1898 விலை ரூபா ரு.

(Copy - Right Registered)

மணிமேகலையைக் கவலையின்றி ஆராய்ந்து பதிப்பித்து வெளிப்படுத்துதற்குப் பொருளுதவி செய்த பாலவனத்தம் ஜமீன்தாரவர்களாகிய இராமநாதபுரம் ம-ள-ள-ஸ்ரீ பொ.பாண்டித்துரைத் தேவரவர்களுடைய தண்ணளியும் பெருந்தகைமையும் ஒருபொழும் மறக்கற்பாலனவல்ல மிகவும் பாராட்டற்பாலன. இதைப்போன்ற எத்தனையோ பெரியகாரியங்களைத் திருத்தமாகச் செய்து நிறைவேற்றியவர்களின் வழித்தோன்றலாய் மிக்க பாண்டித்தியமடைந்து நூலாராய்ச்சியே இன்பத்துளின்பமெனக் கொண்டுவாழும் அப்பிரபு அவர்களுக்குப் பழைய நூல்களையும் அவற்றினுரைகளையும் பதிப்பித்து வெளிப்படச் செய்து அமிழ்தினுமினிய தமிழைப் பரிபாலித்தல் இயல்பாயினும் படிப்பாரும் கேட்பாருமின்றி மூலையிலே மறைந்துகிடக்கும் அரிய பெரிய நூல்களைத் தேடித்தொகுத்துப் படித்துக்கொண்டு அநாதரவுற்றிருப்போர்க்கு அஃது அரியதினும் அரியதாகத் தோன்றுமென்பது திண்ணம்.

*(மணிமேகலை முகப்பு அட்டையும் உ.வே.சா. முன்னுரையின் ஒரு பகுதியும்)*

# ‘ஆயர்’ சொல்லாய்வு

பேராசிரியர் டாக்டர். அ.தட்சிணாமூர்த்தி

முல்லை நிலத்தில் வாழ்ந்து ஆடுமாடுகளைப் பேணி வாழ்வு நடத்திய தமிழ் மக்கள் ஆயர். இன்று இவர்களை இடையர், கோனார் என்று வழங்குவர். இம்மக்கள் அண்மைக்காலமாகத் தம்மை வடபுலத்து வாழும் யாதவரோடு உறவுபடுத்திக் கொண்டு யாதவ். என்று அழைத்துக் கொள்கின்றனர். இம்மக்களைச் சுட்டும் வேறு சொற்களும் சங்க இலக்கியத்துள் உள. அவை, கோவலர், பொதுவர், அண்டர். இடையர் என்பனவாம். ஆய்மகள், ஆயமகள் என்பன பெண்பாற்பெயர்கள். இப்பெயர்கள் இவர்கட்கு அமைந்ததில் உள்ள அடிப்படையை ஆய்வது இக்கட்டுரை.

ஆயர்:- முதற்கண் ஆயர் என்ற பெயரை ஆய்வோம். இப்பெயர், இம்மக்கள் பேணி வளர்க்கும் பசுக்களின் பெயரான ‘ஆ’ என்பதன் அடியாகப் பிறந்தது என்றே பலரும் கருதுவர். அது சரியானது போல் தோன்றினாலும் உண்மையில் பிழையானது. பசுக்களைக் குறிக்கும் சொற்களாக ஆ, ஆன் என இரு சொற்கள் வழங்கின. ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும் (புறம்.9) என்பதில் இரண்டு வடிவங்களும் உள்ளன. இவற்றில் ஆன் என்பதே பழையது என்றாலும், தொல்காப்பியர் ஆ என்பதனையே அடிப்படையாகக் கொண்டு புணர்ச்சி விதி வகுத்தார். (ஆனும் நீனும் / என்னும் என் கட்டுரையில் விளக்கம் காண்க.) அவ்வாராய்ச்சி இங்கு விரிப்பின் பெருகும். ஆ என்பது சொல்லாயின் அதனை மேய்ப்பார் ‘ஆவர்’ என்று சுட்டப்படல் வேண்டும். இதற்கு ‘ஏனை உயிர் வழி வவ்வும்’ என்ற விதி கொள்க. அவ்வாறன்றி ‘ஆயர்’ என வந்ததற்கு வேறு காரணம் இருத்தல் வேண்டும். ‘ஆன்’ என்பதே சொல்லாயின் ஆன்+அர்=ஆனர் என்று பெயர் அமைய வேண்டும். ஆனால் அத்தகு சொல் ஒன்றேனும் சங்க நூல்களுள் இல்லை.

சங்க இலக்கியத்தில் காண முடியாத இடையர் குலத்தார்க்குரிய ஒரு பெயரைப் பெரிய புராணத்தும், அதற்கு

முன்னர்த் திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றிலும் காணமுடிகிறது. அதுதான் ஆனாயர் என்னும் அடியாரின் பெயர். இஃது, அவ்வடியாரின் இயற்பெயரன்று. ஆன்+ஆயர் என்று பிரித்தால் இவர் கோவினத்து ஆயர் என்பது விளக்கமாகும். ஆ என்பது சொல்லாயின் ஆவாயர் என்று சுட்டியிருப்பர். இப்பொழுது ஒருண்மை விளக்கமாகிறது. ஆக்களின் தொகுதியை (திரளை) உடையவர் ஆனாயர் என்பதுதான் அவ்வுண்மை. ஆயம் என்னும் சொல், கூட்டம், திரள், தொகுதி, என்னும் பொருளில் சங்க இலக்கியத்தில் வழங்கியுள்ளது. பின்வரும் இலக்கியப் பகுதிகளைக் காண்க.

1. தோழியர் குழு: ஆயத்தாரோடு (குறுந் 351:7 ஐங்.380, நூற்.12)
2. அரசியல் சுற்றம்: எம் ஆயம் விட்டு (சிறு பாண்.220)
3. பல இனமாந்தர்: பல்லாயமொடு பதிபழகி (பட்டி.213)
4. மகளிர் கூட்டம்: கலிகொள் ஆயம் (அகம். )
ஒலிகொள் ஆயம் (மதுரை.264)
5. பசுக்கூட்டம்: பயநிரை ஆயம் (அகம். 54:9)
படுமணி ஆயம் (அகம்: 79:6)
புல்லருந்து பல்லாயத்தான் (புறம்.386)

ஆயம் என்பது தொகுதி, மந்தை என்னும் பொருள் கொண்ட சொல் என்பது விளங்கிற்றாதலின் ஆக்களை, அல்லது எருமைகளை அல்லது ஆடுகளை மேய்ப்பார் என்னும் பொருளிலேயே ஆயர் என்னும் பெயர் அமைந்தமை விளங்கும்.

இப்பொருள் கொண்ட இன்னொரு சொல் நிரையென்பது. நிரை கவர்தல், நிரை மீட்டல் என்னும் சொற்களை விளக்குவது மிகை. இதே மந்தை அல்லது திரட்பொருள் கொண்ட மற்றொரு சொல்லுண்டு. அது தொறு என்பதாகும். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி (Lexicon) பின்வரும் பொருள்களைத் தருகிறது. 1. பசுக்கூட்டம் 2. மாட்டுத் தொழுவம் 3. இடைச்சாதி 4. மிகுதி

இங்குக் காட்டப்பட்ட ஏதுக்களால் ஆயர் என்னும் இடைச்சாதியார்க்குரிய பெயர் அவர்கள் பேணிக்காக்கும் ஆக்களின் கூட்டத்தைக் குறித்த 'ஆயம்' என்பதனடியாகத்

தோன்றியது என்ற உண்மை உணரப்படும். ஆங்கிலத்திலும் Cowherd, neatherd, Shepherd என்ற சொற்கள் இதே மந்தைப் பொருள்பட வழங்குவது வியப்பிற்குரியதன்றோ? (herd crowd)

தொழு, தொறு, தொழுவம், தொழுவர், தொழுதி என்னும் சொற்கள் தம்முள் உறவுடையனவாய் அமைந்துள்ளன. தொழுவர் பணி செய்வார் குழு; தொழுவம் - கால் நடைகள் கட்டப்படும் இடம்; தொறு - பசுக்கூட்டம் தோழன், தோழி என்னும் சொற்கள் உடன் இருக்கும் நண்பரைக் குறிப்பன. இவ்வாறே, பலவும் ஒருங்கு திரண்டிருத்தல் பற்றியே தொழுதி முதலான சொற்கள் உருவாயின எனலாம்.

இனி, ஆயன் என்பதற்குரிய பெண்பாற் சொல் பற்றி எண்ணலாம். ஆய்ச்சியர், ஆய்மகள், ஆயமகள் என்னும் வழக்காறுகளைக் காண்கின்றோம். ஆயச்சி என்பது ஆய்ச்சி என்று திரிந்தது என்பதனை விளக்க வேண்டா. 'ஆய மகள்' என்பதனை 'ஆயர் மகள்' என்றதன் திரிபாகவோ 'ஆயம் மகள்' என்றதன் திரிபாகவோ கொள்வதில் தவறில்லை. முன்னது மிகப் பொருந்துவது.

பொதுவர்: சங்க இலக்கியத்தில் பொதுவர் என்ற சொல்லும் இடைக்குலத்தார் குறித்து வழங்கியுள்ளது. 'புன் பொதுவர் வழி பொன்ற' (பட்டி. 281) என்ற பட்டினப்பாலை அடியாலும் அதற்கு நச்சினார்க் கினியர் வகுத்த 'புல்லிய இடையரராய் அரசாள்வோர் கிளை முழுதும் கெட்டுப் போக' என்னும் உரையாலும் இடைச்சாதிக் குறுந்தலைவர்கள் அன்று இருந்தமை புலப்படும். பொதுவர் என்னும் இச்சொல் முல்லைக் கலியில் பலகாலும் வழங்குகின்றது.

தம்முடைய ஆன்படு பொருள்களாகிய பால் தயிர் வெண்ணெய் முதலானவற்றை யாவர்க்கும் பொதுவாய் வழங்குவது பற்றி இப்பெயர் அமைந்தது என்பார் உளர். இஃதுண்மையாயின் இது பிற பிரிவினர்க்கும் பொருள்படுவதே. குறிப்பாக, உமணர் என்பார் நாடு முழுதும் வாழ்ந்த மாந்தர்தம் தேவையை நிறைவேற்றியுள்ளனர். எனவே, தம் பொருள்களைப் பலர்க்கும் விற்றதனால் அமைந்த பெயர் பொதுவர் என்பதனை ஏற்பதற்கு இல்லை.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி, பொது என்ற சொற்குத்தரும் பொருள்களில் ஊர்ப்பொதுவிடமும் ஒன்று. அது பொதுவிடம் அல்லது மன்றமாகும். 'பொதுவிற்றூங்கும் விசியுறு தண்ணுமை (புறம்.89) என்பது காண்க. இப்பொதுவே மன்றமெனப்பட்டது என்பதனை மன்றம் படர்ந்து மறுகு சிறை பாடும் (பதிற்.) என்ற பகுதியால் உணர்க. பொதுவான இடத்தில் அமைந்த கோயிலும் பொது+இல்=பொதியில் ஆயிற்று. அதுவே அம்பலம் என்றும் வழங்கிற்று. பொதுப்படுத்துதலை அம்பலப்படுத்தல் என்று வழங்குவோம். இப்பொருள்களோடு இணைத்துக் கண்டால், பொதுவர் என்பார் ஊர்ப்பொதுவிடமான மன்றத்தோடு உறவுடையார் என்பது விளங்கும். இதனாலேயே பிற்காலத்தில் இடையர் மன்றாடி எனப்பட்டனர். கோவை மாவட்டத்தில் புகழ்பெற்று விளங்கும் மன்றாடியார் மரபு ஆகெழு பெருமரபு என்பதனை எண்ணுக.

மேய்ச்சலுக்குச் சென்ற ஆனிரை மன்றத்தினை நோக்கி விரைவதனைப் புலவர் 'கன்றுபயிர் குரல மன்று நிரை புகுதர' என்று வழங்குவர். ஆயர் குடியினர், தம் குடியிருப்பின் பொதுவிடத்தில் தம் கால் நடைகளை வைத்துப் பேணினர் என்பதனால் இப்பெயர் அமைந்திருத்தல் வேண்டும். பழைய இனக்குழு வாழ்வில் இது பெருவழக்கேயாம்.

இடையர்: இப்பெயர் இவ்வினத்தார் வாழ்ந்த நிலம் பற்றியது என்பது மிகப்பொருந்தும். குறிஞ்சி நிலமான மலை நிலத்தையடுத்துக் காட்டு நிலமான முல்லை நிலமும், அதற்கடுத்து மருத நிலமும், அதனைத் தொடர்ந்து நெய்தல் நிலமும் அமைந்துள்ளமை யாவரும் அறிந்ததே. நெய்தலைத் தனி நிலமாகக் கொண்டாலும் அது மருதத்தின் நீட்சியே யென்பதனை மறுப்பதற்கு இல்லை. எனவே, மலைக்கும் மடுவுக்கும் இடைப்பட்ட காட்டு நிலத்தை வாழிடமாகக் கொண்டோர் இடையர் ஆயினர் என்க.

இனி மானிடவியலாரின் பகுப்பில் இவர்களை எவ்வாறு கொள்ளலாம் என்றும் எண்ணிப்பார்க்கலாம். அலைந்து திரிந்து வாழ்வது வேட்டைப்பண்பாட்டு மக்களின் இயல்பு. எனவே,

இவர்கள் நிலைத்த வாழ்வினரல்லர். நிலத்தை உடைமையாகக் கொண்ட உழவர் வாழ்வு நிலையானது. எனவே குடியானவர் என்ற பெயர் இவர்க்கு அமைந்தது. குடிமகன் என்ற சொல் உழவர்களையே பெரிதும் சுட்டிற்று. அலைந்து திரிந்த வேட்டுவ வாழ்க்கைக்கும், நிலைத்து வாழ்ந்த குடியானவர் வாழ்க்கைக்கும் இடைப்பட்ட வாழ்வினராக ஆயர் ஆயினர். அவர்க்கென்று குடியிருப்புகள் உண்டு. எனினும், அவர்கள் புலம் பெயர்ந்து வாழ்வதனைக் கைவிட இயலவில்லை. அவ்வப்போது வெவ்வேறு இடங்கட்குத் தம் மந்தைகளைக் கொண்டு சென்று மேய்த்துச் சில காலம் கழிந்து மீள்வது அவர் இயல்பாயிற்று. 'ஏறுடை இன நிரை வேறு புலம் பரப்பிப் புலம் பெயர் புலம்பொடு கலங்கி' (நெடு. 4-5) என்பது நெடுநல்வாடை.

இனி, கோன், கோனார் என்னும் பெயர்கள் தோன்றிய வகை குறித்துச் சில சொல்லுதும். கோபன் (gopa) என்னும் வடசொல் பசுக்காப்போன் என்ற பொருள் உடையது. இச்சொல் இடையன் சிவன் எனவும் பொருள்படும். கோபஸ்திரீ இடைப் பெண்ணாவாள். கோபாலன் கோக்களின் காவலன். கண்ணனை வளர்த்தவன் நந்தகோபன். 'சுடர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்' என்பது நாச்சியார் வாக்காகும். கோபன் என்னும் சொல் இடைநின்ற பகரம் கெட்டநிலையில் நந்தகோன் என நிற்கும். எனவே இடையரைக் குறிக்கும் கோன் என்பது கோபன் என்பதன் தொடுவடிவம். கோபன் என்பது கோவன் என்றும் கோன் என்றும் திரிந்தது என்பது பொருந்துவது. கோவன் நிரைமீட்டனன் என்பது சிந்தாமணி (சீவக.455) கோபன் கோவன் ஆனாற்போலவே கோபி (gopi) கோவியானாள். கோவிநாயகன் என்பது திவ்வியபிரபந்தம். பெரியதிரு. 2,1,4 கோவித்தியர் என்பது முல்லை மக்களுள் பெண்பாலரைக் குறித்த சொல். இது காறும் சொன்னவற்றின் பிழிவாவது, கோபன் - கோவன் - கோ(வ)ன் - கோன்+ஆர் - கோனார் எனப்படிப்படியே மாற்றம் நிகழ்ந்தது என்ற செய்தியே.

அரசனைக் குறித்த கோன் என்பதற்கு வேறுவகையில் விளக்கம் சொல்ல இடமுண்டு. கோ என்பது கோன் என்ற தூய தமிழ்ச்சொல்லின் (னகரவொற்று நீங்கிய திரிந்த வடிவமாய்

ஓரெழுத்து ஒருமொழியாய் நின்றது. இதனையே மூலச் சொல்லாய்க் கருதிய தொல்காப்பியர் அதற்கொப்பவே புணர்ச்சி விதி கூறினார். உரையாசிரியர்களும் கோ ஒன் கை என்ற உதாரணம் காட்டினார். ஆனால், இதில் உள்ள ணகர மெய் மூலச்சொல்லின் பகுதியே என்றறிதல் வேண்டும். இக்கோன் என்னும் சொல் அரசனைக்குறித்து எழுவாய் வடிவில் எங்கோன் இருந்த கம்பலை மூதூர் (புறம்.) என வருவது கொண்டும், நுங்கோ யாரென வினவின் (புறம்) என்பது கொண்டும், கோன் என்ற பழைய வடிவமும் கோ என்ற அதன் திரிந்த வடிவமும் ஒரே காலத்தில் இலக்கிய வழக்குப் பெற்றமை தெளியப்படும். இஃதே ஆ, ஆன், என்ற இரட்டை வழக்கிற்கும் பொருந்தும். 'ஆவும்' ஆன்யியல் பார்ப்பன மாக்களும் (புறம்.9) என்பது காண்க.

இனி, கோன் என்பதும் மூலச் சொல்லாகத் தோன்றவில்லை. கோல் செங்கோலைக் குறித்தது. அக்கோலை உடையவன் கோலன் ஆயினன். இச்சொல் பொருள் விரிவுபெற்று, ஆட்சியாளன் என்ற பொருள் தந்தது.

இக் கோலன் என்ற சொல்லே இடைநின்ற லகரம் கெட்டுக்கோன் ஆயிற்று. இது கோபன் என்ற சொல்பகரம் கெட்டுக் கோன் என்றானது போன்றதே. கோபனார் கோவனார் ஆகிப்பின் கோனார் ஆயிற்று எனலாம். மையோடக் கோவனார் என்ற புலவர் பரிபாடலில் உள்ள 7 ஆம் பாட்டின் ஆசிரியராவார். இவர் ஆயர் மரபினராகக் கூடும்.

அண்டர்: என்ற சொல் தேவர்களையும் ஆயரையும் குறிக்கும். அண்டுதல் நெருங்குதலாகும். நெருங்கிய ஆக்களின் கூட்டத்தினைப் பேணி வாழ்பவர் என்ற பொருளில் அண்டர் ஆயினரா எனச் சிந்திக்கலாம்.

இனி, ஏடர் என்ற சொல்லும் ஆயர்க்கு உண்டு என்கிறார். பேராசிரியர் இளங்கோவன். இதன் தோற்றம் தெளியப் பெறவில்லை. ஆனால், சேஷன் என்பது சேடனாகிப் பின் சகரம் விடுபட்டு ஏடன் ஆகியிருக்க இடமுண்டு. இச்சொல்லுக்கு அடியவன், தொழும்பண் என்பது பொருள். தொழு, தொறு என்பன மந்தையைக் குறிக்கும். தொழுவர் என்பார் பணியாளர்

தொழுதி - தொகுதி என்பன கூட்டத்தையே குறிப்பன. இங்கும் மந்தை என்ற பொருளே அமைந்தது.

ஏடர் - இண்டர் -அண்டர் - இடையர் என்ற வரிசையில் திரிபு ஏற்பட்டது என்று முனைவர் இளங்கோவன் கூறுவது வலிந்த கூற்றாகவே தோன்றுகின்றது.

பாண்டியர் குடி எப்பொழுது தோன்றிற்றோ அப்பொழுதே ஆயர்குடியும் தோன்றிற்று என்று பழம்பெருமை பேசும் வகையில் வாடாச் சீர்த்தென்னவன் தொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய நல்லினத்து ஆயர் என முல்லைக்கலி பாடுகிறது. தாம் அரச குடியினர் என்று ஆயர் கூறிக் கொள்ளவில்லை. பாண்டியரும் தம்மை ஆயர்குலத்தவர் என்று கூறிக் கொண்டதில்லை. சோழ அரச குலத்தவர் இடையர் குலத்தவர் என்று கூறப்பட்டதுண்டு என்பதற்குக் குலோத்துங்கச் சோழன் பற்றிய ஒட்டக்கூத்தர் பாட்டொன்றனை மேற்கோளாகக் காட்டுகிறார் முனைவர் இளங்கோவன். அப்பாட்டின் பின்னிரண்டு அடிகள் வருமாறு:-

கள்ளக் குறும்பர் குலமறுத்த கண்டா வண்டா கோபாலா
பிள்ளைமதிக் கண்டு எம்பேதை பெரிய மதியும் இழந்தாளே

இதில் முதலடியிலுள்ள அண்டா என்ற விளியை இளங்கோவனார் அண்டர் எனக் கொண்டார். அதனால் அண்டர் கோபால என இணைத்துப் பார்த்துள்ளார். ஆனால், இதில் கண்டா, அண்டா, கோபாலா என்பன மூன்றும் விளிகளே. கண்ணன் தூதுச் சருக்கத்தில் சகதேவன் கூற்றாக வரும் 'நீபாரத அமரில்' என்ற பாட்டில்

"புயல் வண்ணா போரேறே கோவிந்தா நீயின்றி
மாபாரதம் அகற்ற மற்றார்கொல் வல்லாரே"

என விளிகள் அடுக்கி வந்ததுபோல் 'கண்டா அண்டா கோபாலா' என்பதனைக் கொள்ளவேண்டும். திருமாலின் அவதாரமாக மன்னனைப் புகழும் மரபினையொட்டியதே இது.

எனவே, வேட்டுவ வாழ்வுக்கும் உழவு வாழ்வுக்கும் இடைப்பட்ட பண்பாடுடையார் இடையர் ஆயினர் என்றும்

சொல்ல இட முண்டாகிறது. இதற்கு மாறாக, முதலியர், இடையர், கடையர் என மாந்தரைப் பிரித்து இடைப்பட்டவர் என்பதும், விருஷ என்னும் வடசொல்லின் அடியாத் தோன்றிய விடை என்பது இடை என்று திரிந்தது என்று சுற்றி வளைத்துப் பொருள் காண்பதும் பொருத்தமாகப்படவில்லை.

தூய தமிழ்ச் சொற்களான இடையர் என்பதனையும் விடை என்பதனையும் ரிஷபம் என்னும் வடசொல்லின் தற்பவங்களாகக் கோடல் சற்றும் பொருள்தராது. ரிஷபம் என்பது தமிழில் இடபம் என்று மாறி வழங்குகின்றது. விடை என்னும் சொல் காளைமாடு, ஆட்டுக் கிடாய், காட்டுப் பூனையின் ஆண் எனப்பல பொருள்களில் சங்க இலக்கியத்தில் ஆளப்பட்டுள்ளது. (ஆட்டுக்கிடாய்: புறம். 21,113,262,326,364,366; ஆண் காட்டுப் பூனை: புறம்.324) காளைமாடு: குறிஞ்.136, அகம். 214, 311 முதலானவை). இளங்காளையொருவனை விடலை என்று குறித்தல் பெருவழக்கு. விடலையும் விடையும் பொருளால் உறவுடையன. விடக்கு என்னும் சொல்லும் விடையோடு உறவுடையது. "மீன் தடிந்து விடக்கு அறுத்து" (பட்டி.176) விடக்காவது இறைச்சி. இது ஆட்டிறைச்சியைக் குறித்தது என்பது பொருத்தம்.

ஆயர் காளையை மட்டும் மேய்ப்பவரல்லர். எனவே ரிஷபம் என்னும் சொல்லடியாக இடையர் என்ற பெயர் ஏற்பட்டது என்பது சிறிதும் பொருள்தராது.

கோவலர்: இதுவே சங்க இலக்கியத்தில் மிகுதியாக ஆட்சிபெற்ற ஆயர்குடியினர்க்குரிய பெயராகத் தெரிகின்றது. ஏறத்தாழ 40 பதிவுகள் உள்ளன.

இச்சொல் கோபாலன் என்ற வடசொல்லடியாகத் தோன்றியது என்பது மிகப்பொருந்தும். கண்ணகி கேள்வன் பெயர் கோவலன். இது கோபாலன் என்பதன் திரிபு என்பதனை மாடலமறையோன் வாயிலாக இளங்கோவடிகள் நிறுவுகின்றார் (விருத்த கோபால: அடைக்கலக் காதை,94)

பசுவைக் குறிக்கும் வடசொல் 'கோ' (go) பாலன் -

பராமரிப்போன், பேணுவோன்; காப்பவன்; உலகபாலன் - கடவுள், அரசன். இச்சான்றுகளால் கோவலர் என்னும் சொல் கோபாலன் என்னும் சொல்லோடு தொடர்புடையதென்பது போதரும். ஆயர், மேய்ப்பர் என்னும் சொற்கள் கிறித்துவ சமயத்தாரிடம் பெற்ற செல்வாக்கை விளக்கத் தேவையில்லை. Good Shephered என்ற கிறித்துவ உலக வழக்கினை யாரே அறியார்!

தொகுப்புரை:

1. 'ஆயர்' என்னும் பெயர் 'ஆயம்' என்னும் சொல்லடியாகத் தோன்றியது.

2. பொதுவர் என்பது ஊரின் பொதுவிடமான பொது, மன்றம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட பெயர்.

3. மலை நிலத்திற்கும் மருத நிலத்திற்கும் இடையே வாழ்ந்தமையின் இடையர் ஆயினர் அல்லது நிலைத்த உழவு வாழ்விற்கும் நிலையற்ற வேட்டுவர் வாழ்க்கைக்கும் இடைப்பட்ட வாழ்வினரானமையால் இடையராயினர்.

4. கோவலர் என்பது கோபாலர் என்ற வடசொல்லின் திரிபு வடிவம்.

5. அண்டுதல் நெருங்குதல் ஆதலின், நெருக்கமான மந்தைகளைப் பேணினமைபற்றி அண்டர் ஆயினர் என்பது பொருந்தலாம்.

6. ஏடன் என்பது சேஷன் என்ற வடசொல்லின் திரிபு. அது அடிமை, தொழும்பன் என்னும் பொருள் கொண்டது. தொழு என்பதும் தொழுதி என்பதும் பெருந்திரளைக் குறித்தலால், மந்தை, ஆநிரை என்பனவற்றோடு உறவுடையதாகவே இப்பெயர் தோன்றுகிறது. ஏடர் திரிந்து இடையர் ஆகவில்லை.

7. விடை என்பது தூய தமிழ்ச்சொல். அதனை வ்ருஷ என்ற வடசொற்றிரிபென ஆநிரை இதழாளர் கோடல் பொருந்தாது.

8. கோன் என்பதும் கோனார் என்பதும் கோபன், கோவன், கோபனார் என்பவற்றின் திரிபுகளாகக் கொள்ளத்தக்கன.

# திருவெம்பாவை பாடல் எண் 10

## பாதாளம் ஏழினும் கீழ்

பேராசிரியர் சுப.அண்ணாமலை

பெண் ஒருத்தி சிவபிரானுடைய அழகிய திருமேனியைக் கண்டு அன்பு கொண்டாள். அவன் அவளை ஆட்கொண்டு, இன்பம் அளித்து மறைந்தான். அவள் பிரிவுத் துயரால் பெரிதும் வருந்தினாள்; இறைவனைக் காணத் துடித்தாள். வருவான், வருவான் என்று காத்திருந்த நாளெல்லாம் கனலாய்ச் சுட்டன. பொறுமை இழந்து, அவனைத் தேடிச் செல்ல முற்பட்டாள்.

அவன் ஊர் எது? பேர் என்ன? அவனுடைய சுற்றத்தார் யாவர்? என்றெல்லாம் விசாரிக்கத் தொடங்கினாள்.

அவள் காதல் பற்றிக் கேட்டவர்கள் கைகொட்டிச் சிரித்தனர். சிவபிரான் உருவம் இல்லாதவன் ஆயிற்றே. அவனுக்கா காதல் கொண்டாய்? என்று நகையாடினர். இறைவனைப் பற்றித் தாங்கள் அறிந்ததை எல்லாம் கூறத் தொடங்கினர்.

"அவன் மண்ணும், விண்ணும் எல்லா அண்டங்களும் கடந்த வடிவத்தை உடையவன். அவனது திருவடியை வேதங்கள் சொல்லால் விளக்க முற்பட்டு சொல்ல முடியாமல், 'ஐயா' என அலறிக் கையுதறி நின்றன. "வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே."

விண்ணோர்கள் அவனைத் தேடிக் காண முனைந்து, அவன் திருவடி, ஏழு பாதாள உலகங்களையும் கடந்து, கீழே கீழே போய்க் கொண்டிருந்த காரணத்தால், அதைக் காண முடியாமலும், அவனது திருமுடி, மேல் அண்டங்களுக்கு எல்லாம் உயர்ந்து கடைசியாக உள்ள உலகில், மிக்க உயரமாக உள்ள பொருளையும் விட உயர்ந்து சென்றமையால், அதைக் காண முடியாமலும் தவித்தனர்.

**மண்ணுலகில் உள்ளோர், அவனைச் சத்தியும் சிவமுமான வடிவத்தில் - பெண் பாதி, ஆண் பாதியான வடிவத்தில் -**

கண்டு, ஆணா, பெண்ணா என்று அறியமாட்டாமல் திகைத்தனர். அவனது தடத்த வடிவம் இதுமட்டும் அன்று; இன்னும் பல. "ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதி மாண்பும் கேட்பான் புகில் அளவில்லை."

இப்படித் தனக்கென வடிவமில்லாதவனையா நீ காதலிக்கிறாய்?

"*பாதாளம் ஏழினும் கீழ், சொற்கழிவு, பாதமலர்,*
*போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே.*
*பேதை ஒருபால், திருமேனி ஒன்றல்லன்*
*வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்*"

என்று மணிவாசக நாயகியை மற்றவர்கள் கேலி செய்தனர். வேதம் துதித்தால், அவன் புகழ் சொற்கழிவு அதாவது, சொல்லைக் கடந்தது என்றும், விண்ணோர் துதித்தால், அவன் திருவடி பாதாளம் ஏழினும் கீழ்; போதார் புனைமுடி எல்லாப் பொருள் முடிவே என்றும், மண்ணோர் துதித்தால் பேதை ஒருபால், திருமேனி ஒன்றல்லன்'
என்றும் கொண்டு கூட்டிப் இப்பொருளைக் காணலாம்.

வேதங்களில் உள்ள மந்திரங்களின் பொருளைக் கடந்த திருவடியை உடையவன் என்றும், எல்லாப் பொருள் என்பது வேதங்களால் உரைக்கப்படும் பொருள் என்றும், அப்பொருள் முடிவு என்பது உபநிடதங்களும் ஆகமங்களும் என்றும், அவற்றையும் கடந்தவன் இறைவன் என்றும் மற்றொரு பொருள் கொள்ளலாம்.

மணிவாசக நாயகி இந்தக் கேலியைக் கேட்டு அயர்ந்து போய்விடவில்லை. இவர்கள் சொல்வதுபோல், சிவபிரான் இத்தன்மைகளை மட்டும் உடையவன் என்றால், அவன் தொண்டர் உள்ளத்தில் நீங்காமல் நிற்பது எப்படி முடியும்?

காதலியாகிய தமக்கு அன்பு காட்டி, கருணை செய்து இன்பம் தந்தானே! அது எவ்வாறு இயலும்? தொண்டருக்கு அவன் அளித்த அருளும், காதலியாகிய தமக்கு அவர் தந்த இன்பமும், சொல்லால் சொல்ல முடியாதனவல்லவோ? வேதங்கள் சொல்லிக் காட்ட முடியாதவன் என்று மற்றவர்கள் சொல்கிறார்கள்.

ஆனால் அவன் எங்களை நெருங்கி, அரவணைத்து, இன்சொல் பேசி, தந்த அருளும் இன்பமும் சொல்லிக் காட்ட முடியாதவை என்று நான் எண்ணுகிறேன்.

"ஓத உலவா ஒரு தோழன், தொண்டர் உளன்"

எனவே அவனுக்கு வடிவம் உண்டு. "இது அவன் திருவுரு; இவன் அவன் என யாம் நன்கு பார்க்கும்படி எங்களை ஆண்டு கொண்டு இங்கு எழுந்தருளினான்" இப்போது பிரிந்துவிட்டான் அவனுக்கு வடிவம் மட்டுமின்றிப் பேரும் உண்டு. ஊரும் உண்டு. உற்றார் உறவினரும் உண்டு அவன் அருளைப் பெறாத அயலாரும் உண்டு. இவற்றைச் சொல்லக் கூடியவர்கள் தொண்டர்களே. படித்தவர்களால் சொல்ல முடியாது. ஏகனாகி இறைபணி நிற்கும் தொண்டர்களால்தான் சொல்லமுடியும் என்று எண்ணிய மணிவாசக நாயகி, அத்தொண்டரை விசாரிக்க எண்ணிய தமது கருத்தைப் பாவை நோன்பிருக்கும் பெண் ஒருத்தியின் மேல் ஏற்றி, அவள் பிற கன்னியருடன் கோயிலுக்குச் சென்றிருக்கும் போது, அங்குள்ள பெண் தொண்டர்களை, இவற்றைக் குறித்து விசாரிப்பதாகப் பாடுகின்றார்

"கோயில் பிணாப் பிள்ளைகாள்,
ஏது அவன் ஊர்? ஏது அவன் பேர்?
ஆர் உற்றார்? ஆர் அயலார்?
ஏது அவனைப் பாடும் பரிசு ஏலோரெம்பாவாய்"

கன்னியர், பெண்களுடன்தான் உரிமையுடன் பேச முடியும். ஆதலால் அவர்களைக் கேட்கின்றாள். 'நீங்கள் இறைவனிடம் ஒன்றிக் கலந்த உள்ளத்துடன் கோயிற்பணி செய்துவருகிறீர்கள். ஆதலால் அவனைப் பற்றி நன்கு அறிந்திருப்பீர்கள். அன்பு கூர்ந்து இவற்றை எனக்குச் சொல்லுங்கள். அவனைப் பார்க்கும் வரை, அவனைப் பாடும் முறை என்ன என்றும் கூறினால், ஆறுதல் கொள்வேன். உங்களுக்கு நன்றி சொல்வன்.'
என்று கூறுகின்றாள்.

# ஔவையார்

*பேரறிஞர்.* **நா. பாலுசாமி**

## முன்னுரை

வரலாற்றுக் காலத்திற்கு முன் தொடங்கிக் கி.பி.3-ஆம் நூற்றாண்டு முடிய உள்ள காலப் பகுதி உலக வரலாற்றில் சிறப்பாகத் தமிழக வரலாற்றில் - குறிப்பிடத்தக்கதொரு கால கட்டமாகும். பழம்பெரும் நாடுகளாகிய கிரீசு, இத்தாலி, சீனா, எகிப்து போன்ற நாடுகளைத் தவிர, பிற நாடுகளில் நாகரிகம் அரும்பாத நிலையைத்தான் அன்று காணமுடியும். மேலே கண்ட பழம்பெரும் நாடுகளுள்ளும், பண்டைத்தமிழகம் சங்க காலத் தமிழகம் - பல்வேறு துறைகளில் தனிச்சிறப்புப் பெற்றுப் புகழேணியின் உச்சத்தில் நின்றது. இலக்கியம், இலக்கணம், கலை, கல்வி, பண்பாடு, சிந்தனைவளம் முதலிய துறைகளில் தமிழகம் அக்காலத்தில் தன்னிகரின்றித் திகழ்ந்தது; குறிப்பாகக் கல்வித் துறையில் - சிறப்பாகப் பெண் கல்வியில் - பீடுற்றுத் திகழ்ந்தது. ஆடவரும் பெண்டிரும் அறிவில் இணையாக மிளிர்ந்தனர். தொல்காப்பியர், திருவள்ளுவர், இளங்கோவடிகள், சாத்தனார், கபிலர் - பரணர் போன்ற சங்கச் சான்றோரிடையே, ஔவையார், பொன்முடியார், வெள்ளி வீதியார், நக்கண்ணையார், நச்செள்ளையார், ஒக்கூர் மாசாத்தியார், நப்பின்னையார், காக்கை பாடினியார், காவற்பெண்டு் இன்னோரன்ன எண்ணற்ற கவியரசிகள் மின்னிக் கொண்டிருந்தனர். இத்தகு காட்சியை வேறு எந்நாட்டிலும் காணமுடிவதில்லை. "கல்வி சிறந்த தமிழ் நாடு" என்று கவியரசர் பாரதியார் புகழ்ந்தது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. இப்பின்னணியில், செவ்வியற் புலவர் ஔவையார் பற்றிச் சிறிது சிந்திப்போம்.

## புராணச் செய்திகள்

ஔவைப் பெருமாட்டியின் வரலாறு ஏனைய பழம் பெரும் புலவர்களைப் போலவே புதிராக உள்ளது; உண்மை வரலாறு காண்டல் அரிது. அவர் பற்றிய அகச்சான்றுகள் அவர்தம் பாடல்களில் இலை மறை காயாகவேனும் கிடைத்தற் கரிதாகிறது.

இந்நிலையில், பல்வேறு காலப்பகுதிகளில் அவர் மீது கொண்ட பெருமித உணர்வால் கதைகள் பல தோன்றலாயின. தமிழ் நாவலர் சரிதை, தொண்டை மண்டல சதகம், திருவள்ளுவர் கதை, ஞானாமிர்தம், கபிலர் அகவல், விநோதரச மஞ்சரி, புலவர் புராணம், பன்னிரு புலவர் சரித்திரம், இவைபோன்ற பிற நூல்களில் ஔவையாரைப் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. ஆயின், அவை அறிவுக்கும் அறிவியலுக்கும் அப்பாற்பட்ட புனைகதைகளாகவே தோன்றுகின்றன. நம்பத்தக்க வரலாற்றுண்மைகள் கிடைக்கவில்லை. எனவே, அவாதம் பாடல்கள் கொண்டே ஓரளவு அவர்தம் வாழ்க்கை வரலாற்றை அறியவேண்டிய நிலையில் உள்ளோம்.

## வெளிவந்துள்ள நூல்கள்:

ஔவையாரின் வரலாறு கூறும் நூல்கள் சில அறிஞர் பெருமக்களால் எழுதுப்பெற்றுள்ளன. அவற்றுள், திரு.சு.அ. இராமசாமிப்புலவர் எழுதிய தமிழ்ப்புலவர் வரிசை, புலவர் கா.கோவிந்தனார் எழுதிய சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை, மகாவித்துவான் ரா.ராகவையங்கார் எழுதிய நல்லிசைப் புலமை மெல்லியலார்கள், செந்நாப்புலவர் ஆ.கார்மேகக் கோனார் அவர்களின் ஆய்வு நூலாகிய நல்லிசைப் புலமை மெல்லியலார், பேரறிஞர் சிங்காரவேல் முதலியார் வெளியிட்டுள்ள அபிதான சிந்தாமணி, இன்னோரன்ன பல நூல்கள் ஔவையாரைப் பற்றி எழுந்துள்ளன. இவற்றுள், புலவர் கா.கோவிந்தனாரும், செந்நாப்புலவர் ஆ.கார்மேகக் கோனாரும் ஆய்ந்து வெளியிட்டுள்ள இருநூல்கள்தாம் ஔவையாரைப் பற்றி அறிவியல் அடிப்படையில் எழுந்தவை; பிற நூல்களில், தொகை நூல்கள் தொடங்கித் தனிப்பாடல் திரட்டுவரை ஔவையார் பெயரில் அனைத்துப் பாடல்களையும் ஔவையார் ஒருவரே பாடியனவாகக் காட்டியுள்ளனர்.

## பாடப்பெற்ற பாடல்கள்:

பௌவம் நிகர் புகழ் ஔவையார் பாடியனவாகப் புறநானூற்றில் 33 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் 22 பாடல்கள் அதிகமான் நெடுமான் அஞ்சியைப் பற்றியன; அவன்

மகன் பொகுட்டெழினியைப் பற்றி 3 பாடல்களும், நாஞ்சில்வள்ளுவன் பற்றி ஒரு பாடலும் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, சேரமான் மாவெண்கோ கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெருவழுதி என்ற சேர சோழ பாண்டியராம் மூவேந்தரைப் பாடியதாக ஒரு பாடலும் ஆகும். இவ்வாறு 27 பாடல்களில் பாடப் பட்டோர் பெயர்கள் உள்ளன; ஏனைய 6 பாடல்களில் பாடப்பட்டோர் யார் யார் என்பது தெரியவில்லை. ஆயின், 187 ஆம் பாடல் பொருள் மொழிக் காஞ்சியாக வருதலின், பாட்டுடைத் தலைவன் இடம் பெறல் இயலாது. அது, 'நாடாகு ஒன்றோ; காடாகு ஒன்றோ' என்ற பாடலாகும். அதில் ஆடவர் ஒழுக்கம் பற்றிப் பொதுவாகக் கூறப்பட்டுள்ளது. ஒழிந்த 5 பாடல்களில் ஒரு தலைவன், ஓர் அரச குமரன், ஒரு வீரன், போர்க்களத்தில் மகனை இழந்ததாய், மடிந்துபட்ட மற்றுமொரு வீரன் ஆகியோர் பற்றிய செய்திகள் வருகின்றன. இவர்கள் யார் என்பது தெரியவில்லை; மேலும் ஆராயத் தகும்.

இனி, புறப்பொருள் பாடல்களே அன்றி, ஔவையார் அகப்பொருள் பொதிந்த அரிய பாடல்களும் பாடியுள்ளார். அவை, அகநானூற்றில் 4 பாடல்களும், நற்றிணையில் 7 பாடல்களும் குறுந்தொகையில் 15 பாடல்களுமாக மொத்தம் 26 பாடல்கள் ஆகும் இவையன்றி, உரையாசிரியர்கள் குறிப்பிடும், "இருள் தீர் மணி விளக்கத்து" என்பதும் "நல்லம்பர் நல்ல குடியுடைத்து என்பதும் "உடையராய்ச் சென்றக்கால்" என்பதும் ஔவையார் பெயரில் காணப்படுகின்றன. மேலும், தொண்டை மண்டல சதகம் குறிப்பிடும் "வேழம் உடைத்து மலைநாடு" "வஞ்சி வெளிய குருகெல்லாம்" என்பனவும் அவர் பாடியனவாகக் காட்டப்பட்டுள்ளன. "மூவர் கோவையும்" எனவரும் பாடலும் அவருடையதாகவே வருகிறது. அன்றியும், தனிப்பாடல் திரட்டில் வரும் சில பாடல்களும் நல்வழி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை ஆகியநீதி நூல்களும் ஔவையார் பாடியனவாகவே வழிவழியாகக் கொள்ளப் பட்டுள்ளன. ஆயின், தொகை நூற் பாடல்கள் ஒழிந்த ஏனையவெல்லாம் சங்ககால ஔவையார் பாடியனவா? என்பது ஆழ்ந்த ஆராய்ச்சிக்கு உட்பட்டதாகும். விரிக்கின் பெருகும்.

## திணைகளும் துறைகளும்

இப்புலவர் பெருமாட்டியின் சங்கப் பாடல்களுள் பயின்றுவரும் திணைகளும் துறைகளும் பின்வருமாறு: புறத் திணைகளுள் கரந்தை (நிரை மீட்டல்), தும்பை (போரிடல்), பாடாண் (ஆடவர் ஒழுகலாறு), பொதுவியல் (பொதுப்பண்புகள்), வஞ்சி (பகைமேற் செலவு), வாகை (வென்றி) மற்றும் வெட்சி (நிரைகவர்தல்) ஆகிய ஏழு திணைகளில் இவர் பாடியுள்ளார். துறைகளாவன:

(அ) அரசனது வெற்றியைப் பாராட்டும் அரசவாகை
(ஆ) தலைவனின் இயல்புகளை விவரிக்கும் இயன்மொழி வாழ்த்து
(இ) வீரர் மது உண்டு மனங்களிக்கும் உண்டாட்டு
(ஈ) உவகையும் சோகமும் ஒருசேரத் துய்க்கும் உவகைக்கலுழ்ச்சி
(உ) வள்ளலின் வாசலில் நின்றுபாடும் கடைநிலை
(ஊ) தலைவனின் குடிச்சிறப்புரைக்கும் குடிநிலை உரைத்தல்
(எ) அரசனது கீர்த்தியை வியக்கும் கொற்றவள்ளை
(ஏ) இரங்கலையும் அழிவையும் உணர்த்தும் கையறுநிலை
(ஐ) வீரர்மேம்பாடு உரைக்கும் தானைமறம்
(ஔ) பரிசில் பெறவேண்டிப் பாடும் பரிசில் துறை
(க) போரில் மடிந்த வீரனுக்குப்பாடும் பாண்பாட்டு
(கா) உயர்ந்த அறங்களையும் உறுதிகளையும் கூறும் பொருண்மொழிக்காஞ்சி
(கி) முதுகுடியின் வல்லாண்மை கூறும் வல்லான் முல்லை.
(கீ) அரசனது வாளினைப் புகழும் வாண்மங்கலம்
(கு) தலைவனை வாழ்த்திப்பாடும் வாழ்த்தியல்
(கூ) அரசனது மேம்பாடு கூறும் வேத்தியல்
(கெ) விறலியை வழிப்படுத்தும் விறலியாற்றுப்படை

ஆகிய 19 புறத்துறைகளை இப்புலவர் பெருமாட்டி பாடியுள்ளார். இங்குக் கூறப்பட்ட புறத்திணைகளும் துறைகளும் பெரும்பாலும் தொல்காப்பியத்திற்குப் பின்னெழுந்த புறப்பொருள் வெண்பா மாலையை ஒட்டியே வகுக்கப்பெற்றுள்ளன.

## பாடப்பட்டோர்

சேர நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய தகடூரைத் தலைநகராக்கொண்டு ஆண்ட அதியமான் நெடுமான் அஞ்சி, அவன் மகன் பொகுட்டெழினி, தொண்டைமான், நாஞ்சில் வள்ளுவன், இராசசூயம் வேட்ட பெருநெற்கிள்ளி, சேரமான் மாவெண்கோ, கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி என்போர் ஆவர். அதியமானை "எம்முளும் உளன் ஒரு பொருநன்" என்றும் "மறப்புலி உடலின்மான்கணம் உளவோ" என்றும் அவனது வீரத்தையும், இல்லோர் ஒக்கல் தலைவன் என்றும், "யானை தன்கோட்டிடைவைத்த கவளம் போலக் கையகத்தது அது பொய்யாகாதே" என்றும் அவனது ஈரத்தையும் புகழ்ந்து பாடியிருப்பது நயனும் பயனும் உடையதாம் இனி, "உமணர், கீழ் மரத்துயாத்த சேம அச்சு" அன்னோன் எனப் பொகுட்டெழினியின் காவல் திறத்தை வியந்துள்ளார். நாஞ்சில் வள்ளுவனைப் பாடும் போது, யாம் சில அரிசி வேண்டினோம் ஆக..... பெருங்களிறு நல்கியோன்" என்று அவனது கொடைப் பெருமையை வியந்துள்ளார்.

இனி, ஒரு வேள்வியின்போது, சேரமான் மாவெண்கோவும், பாண்டியன் உக்கிரப் பெருவழுதியும், சோழன் பெருநற் கிள்ளியும் ஒருசேர வீற்றிருந்த வியத்தகு காட்சியை, "கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்— உயர்ந்து மேந்தோன்றிப் பொலிக நும் நாளே" என வாழ்த்தியுள்ளார். பழந்தமிழகத்தில் மூவேந்தரும் இகலின்றி இணைந்து நிற்றல் அரிதினும் அரிதாகையால், ஔவையார் காண்டற்கரிய இக்காட்சியை இங்ஙனம் மனமார வியந்துள்ளார்.

## அகத்திணைகளும் துறைகளும்

ஔவையாரின் புறப்பொருள் சார்ந்த பாடல்களை யாவரும் அறிந்து போற்றுவர். ஆயின், அவர்தம் அகப்பொருட் பாடல்களும் சிந்தைக்கு விருந்தாகும் என்பதை அறிவோர் சிலரே. அகத்திணைகளாகிய குறிஞ்சி முதலிய அன்பின் ஐந்திணைகளிலும் இவர்தம் பாடல்கள் உள்ளன. சொற்செறிவு, பொருள் நுட்பம் கற்பனைத்திறம், கலையியல் பார்வை முதலியன இவர் தம் பாடல்களில் அமைந்துள்ள நயங்களாம்.

அகப்பொருட் பாடல்கள் பெரும்பாலும் தலைவி கூற்றாகவும், சிறுபான்மை தோழி முதலிய பிறர் கூற்றாகவும் அமைந்துள்ளன. தலைவியின் பிரிவாற்றாமை, அதனால் அறிவு மயக்கம் ஏற்படுதல் முதலிய துறைகள் விளக்கப் பெற்றுள்ளன. கார்த்திகை விளக்கீடு, கிள்ளைகள், தானியங்களைச் சேகரித்துக் கொணர்ந்து முற்றுகைக்கு உட்பட்டுத்தவிக்கும் வீரர்களின் பசியை ஆற்றுதல் முதலிய அரிய செய்திகள் சில விளக்கப்பட்டுள்ளன. ஔவையாரின் நுண்ணிய இயற்கை பற்றிய அறிவு பாராட்டும் வகையில் அமைந்துள்ளது. பாரியின் பறம்புமலை முற்றுகையிடப்பட்டதும், சேரனது மலை வளமும் புலப்படுத்தப்பட்டுள்ளன. இவரது அகப்பொருட்பாடல்களின் இலக்கிய நயங்கள் வியக்கத்தக்கனவாம். ஓர் எடுத்துக்காட்டு: பிரிவின்கண் தலைவி அறிவு மயங்கிச் சொல்லியதாக வரும் அகநானூற்றுப்பாடல் ஒன்று (273) பின்வருமாறு:

*விசும்பு விசைத்து எறிந்த கூதளம் கோதையில் (பூச்செடி)*
*பசுங்கால் வெண்குருகு வாப்பறை வளைஇ(பரவிய சிறகுகள்)*
*ஆர்கலி வளவயின் போதொடு பரப்பப்*
*புலம்புனிறு தீர்ந்த புதுவரல் அற்சிரம் (முன்பனி)*
*நலம்கவர் பசலை நலியவும், நம்துயர்*
*அறியர் கொல்லோ தாமே! அறியினும்,*
*நம்மனத் தன்ன மென்மை இன்மையின்*
*நம்முடைட் உலகம் உள்ளார் கொல்லோ?*
*யாங்கென உணர்கோ யானே? வீங்குபு*
*தலைவரம்பு அறியாத் தகைவரல் வாடையொடு*
*முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுளை*
*அசைவுடை நெஞ்சத்து உயவுத்திரள் நீடி*
*ஊரோர் எடுத்த அம்பல் அஞ்சினை*
*ஆராக் காதல் அவிர்தளிர் பரப்பிப்*
*புலவர் புகழ்ந்த நாணில் பெருமரம்*
*நிலவரை எல்லாம் நிழற்றி*
*அலர்அரும்பு ஊழ்ப்பவும் வாராதோரே!...*

இதன் திரண்ட பொருள்: வாடைக் காற்றோடு சேர்ந்து முலைகளின் இடையே தோன்றிய காதல் வேட்கை வேயாகிய

இளைய முளை (வித்து) தளர்ந்த நெஞ்சத்தில் வருத்தமாகிய அடியாய் நீண்டு, ஊரார் எழுப்பிய அம்பலாகிய அழகிய கிளைகளைக் கொண்டு, காதல் என்னும் தளிர்களைப் பரப்பி, நாணம் இல்லாத பெரிய மரம் ஆகி, நில எல்லை முழுதும் கவிந்து அலர் ஆகிய மலர்களைச் சொரியவும் வாரார் ஆயினர் நம் தலைவர்;

வானத்தின் மீது வேகமாக எறிந்த கூதாளியின் மாலை போல, பசிய கால்களை உடைய வெள்ளாங்குருகு, சிறகுகளை வளைத்து, கடற்பக்கத்திலே காலையில் பரவி அமர, பனிக்காலத்தில் நமது அழகைக் கவர்ந்த பசலை நம்மை வருத்தவும், நாம் அடையும் துன்பத்தை அவர் அறிந்திலரோ? ஒருகால் அறிந்திருப்பினும், கருணை இன்மையால் நமது பெண்கள் உலகத்தின் இயல்பினை நினைந்திலரோ? யான் என்னென்பேன்!

இப்பாடலில், பிரிவாற்றாமை முளையாகவும், அதற்கேற்ப அவ்வாற்றாமை மிகலும், ஊரார் எழுப்பிய அம்பலும், அதனால் மிக்குத் தோன்றும் காதலும், காதல் மிக்கவிடத்து நாண் அழிதலும், பின்னர் அலர் பரவுதலும் முறையே பராரை (அடிமரம்) சினை, தளிர், பெருமரம், மலர் என்பனவாகவும் உருவகம் செய்யப்பட்டுள்ளன. இப்பாடல் முற்றுருவகம். இவ்வாறு உருவகங்களைக் காரண காரிய முறையில் அமைத்திருப்பது ஔவைப் பெருமாட்டியின் எல்லையில்லா நல்லிசைப் புலமைக்கு சான்றாகும் அன்றோ?

அன்றியும், "பசுங்கால் வெண்குருகு" என்னும் தொடரில் முரண் தொடை அமைந்திருத்தலும், வெண்ணிறக் குருகுக்குக் கூதாளி மலரை உவமை கூறியிருத்தலும் பெருமாட்டியின் சொன்னயம் உவமைநயம் ஆகியன புலப்படுத்துவனவாகும். பறக்கும் தன்மைபற்றிச் சிறகினைப் 'பறை' என்றும், தாவும் தன்மைபற்றி வாப்பறை என்றும் கூறியிருக்கும் பொருத்தம் வியப்புக்குரியதாம். அவ்வாறே, இடையறாது ஒலித்துக் கொண்டிருக்கும் பரந்த கடலினை 'ஆர்கலி' என்றும் இரக்ககுணத்தை 'மென்மை' என்றும் கூறியிருப்பதும்

உன்னற்பாலதாம். வளர்ந்து கொண்டே செல்லும் தன்மைத்தாகிய காதலை 'ஆராக்காதல்' என்றும், உயிரினும் சிறந்த நாணத்தைப் 'புலவர் புகழ்ந்த நாண்' என்றும் புனைந்திருத்தலும் சிந்தைக்கு இனிமை பயப்பதாம். ஈராயிரம் ஆண்டுகட்கு முன் எழுந்த இப்பாடலில் எளிமையும் இனிமையும் ஆழமுடைமையும் அயல்மொழிக் கலப்பின்மையும் மனங்கொண்டு மகிழற்பாலதாம். ஔவையாரின் நா நலத்திற்கும் பா நலத்திற்கும் இப்பாடல் ஒன்றே சான்றாம்.

## வாழ்க்கை வரலாறு:

முன்னர்க் கூறியாங்கு, ஔவையாரின் உண்மை வரலாறு தெற்றெனப் புலப்படுமாறு இல்லை. அவர் பிறந்த குடி, பெற்றோர், உடன் பிறந்தோர், நாடு, ஊர், கல்வி முதலியனபற்றி அவர்தம் பாடல்களைக் கொண்டே பெரிதும் உணர்ந்து கொளல் வேண்டும்.

## பெயர்:

ஔவையார் என்ற சொல் தாயைக் குறித்தும் அக்காலத்தில் வழங்கிவந்துள்ளது. கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய அரசர் உள்ளிட்ட பலர்க்கும் அறிவு கொளுத்தும் பெருநிலையில் இருந்தமையால், அவரைச் சமுதாயத்திற்கே ஒரு தாய் போன்றவர் எனக்கருதி, அவர் காலத்து வாழ்ந்த மக்கள், அவரை ஔவையார்என்று அழைத்திருக்கலாம். அன்றி ஔவையார் என்பது பெற்றோரால் இடப்பெற்ற இயற்பெயரே எனக் கொள்ளினும் இழுக்கின்று.

## பெற்றோர்

ஔவையாரின் பெற்றோர் பற்றிப் பலகதைகள் புனையப்பட்டுள்ளன. அக்கதைகளில் வரும் செய்திகள் முரண்பாடுகள் மலிந்தவை. ஞானாமிர்தம் என்னும் பிற்கால நூல் ஔவையாரின் தந்தை யாளி தத்தன் என்னும் மறையோன் எனவும், தாய் ஆதப்புலைச்சி எனவும் கூறுகிறது. ஆனால், கபிலர் அகவல் இவர்தம் பெற்றோர் பெயர்கள் ஆதியும் பகவனும் எனக் கூறுகிறது. இவர் உடன்பிறந்தோர் என்று

கூறப்படும் கபிலர், அதியமான், வள்ளி, முறுவை, திருவள்ளுவர், இலுப்பை எனவும் கூறவர். இதற்குச் சங்க நூல்களுள் எவ்வித ஆதாராமும் இல்லை. இவ் எழுவருள்ளும் வள்ளுவர், கபிலர், அதியமான் என்போரே சங்க நூல்களில் வருவோர் ஆவர். எனினும், இவர்கள் பிறந்த ஊரும் குடியும் வெவ்வேறானவை. கபிலர் அந்தணர்; வள்ளுவர் வள்ளுவக் குடியில் பிறந்தவர். அதியமான் தகடூரில் இருந்தவன்; சேரர் குடியில் தோன்றியவன். ஔவையார் பாணர் குடியில் பிறந்தவர். இவ்வாறாக உடன் பிறந்தோர் எனக் கூறப்படும் இவர்கள் வேறுபட்ட நிலையினர் என்பது தேற்றம் இக்கூறிய காரணங்களால் இவர்தம் பெற்றோர் பற்றிய செய்திகள், உடன்பிறப்புக்கள் பற்றிய குறிப்புக்கள் எல்லாமே கற்பனைக் கதைகள் எனத் தள்ளப்படல்வேண்டும். இவர்தம் பெற்றோர் யாவர் என அறியுமாறு இல்லை என்பதே முடிவு.

## குடி (குலம்)

ஔவையார் பிறந்த குலம் அல்லது குடி பற்றி இரு வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அவர் பாணர் குடியில் பிறந்தவர் என்றும், அவ்வாறன்று, அக்காலத்தில் புலவர் பலரும் வள்ளல்களைப் பாடிப் பரிசில் பெறச் செல்லும்போது, தம்மைப் பாணராகவும், மனைவியரைப் பாடினி அல்லது விறலியராகவும் கற்பித்துக்கொண்டு பாடுவது மரபு; அதனாலேயே ஒரு புலவரைப் பாணர் வகுப்பைச் சார்ந்தவர் என்று கூறுதல் கூடாது என்றும் இருவகையாகக் கூறப்படுகிறது.

***ஔவையார் பாணர் குடியில் பிறந்தவரே என்பார் கூறும் காரணங்கள் வருமாறு:***

(அ) ஒரு பகை அரசன் ஔவையாரை விளித்து, விறலி, உன் நாட்டில் என்னொடு பொருதும் ஆற்றலுடையோர் உளரோ என்று வினவ, அதற்கு மாற்றம் விடுப்பாராய்த் தாமே பாடிய பாடல் ஒன்றில் தன்னை விறலி என அப்பகையரசன் சுட்டியதாகப் பாடியுள்ளார். பாடல் அடிகள்:

> *"இழையணிப் பொலிந்த ஏந்துகோட்டு அல்குல்*
> *மடவரல் உண்கண் வாணுதல் விறலி,*
> *பொருநரும் உளரோநும் அகன் தலை நாட்டெனு*

*வினவலானாப் பொருபடை வேந்தே*

இப்பாடல் அடிகளில் ஔவையாரை விறலி என விளித்ததும்

(ஆ) "அறவை நெஞ்சத்து ஆயர் வளரும்" எனத் தொடங்கும் புறப்பாட்டில் இப்பெருமாட்டியே,

*"மலைக் கணத் தன்ன மாடம் சிலம்பஎன்*
*அரிக்குரல் தடாரி இரிய வொற்றிப்*
*பாடி நின்ற பன்னாள் அன்றியும்"*

என்ற அடிகளில் தனது தொழிற் கருவியையும் தொழிலையும் குறித்திருப்பதும்,

(இ) அதியமான் நெடுமான் அஞ்சி பரிசில் நீட்டித் தானைப் பார்த்து, மானம் பெரிதெனக் கருதிய ஔவையார், அவனை அரசனென்றும் கருதாது நெஞ்சழுத்தத்துடன்,

*"காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை"* (புறம் 206)

என்று, தன் கலன்களையும் இசைக் கருவிகளையும் தூக்கிக் கொண்டு புறப்பட்டதும், கலன் என்பதற்குப் பழைய உரையாசிரியர் 'யாழ்' எனப் பொருள் கொண்டதும்,

(ஈ) இப்பெரும்புலவர் ஔவைப்பாட்டி என்றே பலராலும் பெருவழக்காகப் பேசப்படுவதும்,

(உ) பாட்டி என்பது பாணன் என்பதன் பெண்பாற்பெயர் என்பதும், பாடினி, பாட்டி, விறலி என்பன ஒரு பொருட் கிளவிகளாக வழங்குவதும், இசையோடு பாடுபவள் பாட்டி ஆதலாலும் இன்னபிற ஏதுக்களாலும், ஔவையார் பிறந்த குடி பாணர் குடியே என்று நிறுவியுள்ளார் **செந்தாப்புலவர் பேராசிரியர் ஆ.கார்மேகக் கோனார்.**

*மாறாக, பேரறிஞர் புலவர் கா.கோவிந்தனார் பின்வரும் ஏதுக்களைக்காட்டி இக்கூற்றை மறுத்துள்ளார். ஏதுக்கள் வருமாறு:*

(அ) அக்காலத்தில் புலவர்கள் எக்குலத்தில் பிறந்தவராயினும் தங்களைப் பாணர் குடியில் பிறந்தாராகக் கொண்டு, அரசன் ஒருவனிடம் சென்று, யாழ் இசைத்துப் பாடுவது போல் பாடல் புனைவதையே கவிமரபாகக் கொண்டுவிட்டனர்.

(ஆ) உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் அந்தணர் மரபு என்று தொல்காப்பிய உரைகாரர் பேராசிரியர் குறித்துள்ளார். அப்புலவர் ஆய் என்ற வள்ளலைப் பாடிய பாடல் ஒன்றில், விறலிபின்வர யாழ் இசைத்து அவனைப் பாடியதாகப் பாடியுள்ளார்.

(இ) வேளாளர் என்று கருதப்படும் அரிசில் கிழார் பேகனைப் பாடிய பாடல் ஒன்றில் "சீறியாழ் செவ்வழி பண்ணி நின்வன்புல நன்னாடு பாட என்னை நயந்து" எனப்பாடியுள்ளார். ஆகவே, அவ்வாறு பாடுதல் கவிமரபே அன்றி, உண்மையாகவே அவர்கள் பாணர் அல்லர். ஔவையார் வரலாறு அறியமுடியாதவாறு இருள் சூழ்ந்துள்ளது என்றே கருதவேண்டும்.

மேற்கூறப்பட்ட இரு பேரறிஞர்தம் கருத்துக்களை மனம் கொண்டு ஆழமாகச் சிந்தித்தல்வேண்டும். வேறுபட்ட இவ்விருவகைக் கருத்துக்களையும் எளிதில் மறுத்து ஒதுக்கிவிடமுடியாது. ஈங்கு ஒன்று நினைவு கூர்தல் வேண்டும். ஔவையார் ஏதோ ஓரிடத்தில் மட்டில் தன்னைப் பாண்குடி விறலியாக வைத்துப்பாடினார் அல்லர்; பல விடங்களில் அங்ஙனமே பாடியுள்ளார். பாணராக வைத்துப்பாடுதல் அக்காலக் கவிமரபு என்பது வறிதே ஊகத்தின்பால் பட்டதாகும். பாண்குடி மதிக்கத்தக்கதாக இருந்தமையால்தான் அதியன் போன்ற அரசர்களும் ஔவையார் போன்றோரை அரசியல் தூதுவராக அனுப்பும் நிலை ஏற்பட்டது. இவர்தம் குடி இன்னது எனத் தெரிந்திலது என்னும் எதிர்மறையினும் அகச்சான்றுடன் விளங்கும் ஔவையாரைப் பாண் குடியினர் எனக்கொள்ளுவதில் இழுக்கொன்றும் இல்லை அன்றோ?

அன்றியும், மாங்குடி கிழார் புறப்பாடல் ஒன்றில் (335) அக்காலத்தில் சிறந்து விளங்கியதாகப் போற்றப்படும் குடிகளுள், துடியன், பாணன், பறையன், கடம்பன் என்ற நான்குகுடிகளைச் சுட்டியிருப்பது நோக்கத்தகும். பூக்களுள் சிறந்தவை: குரவு, தளவு, குருந்தம், முல்லை; உணவுப்பொருள்களுள் வரகு, தினை, கொள், அவரை என்பனவும் குறிப்பிடத்தகுவன என்பது இப்புறப்பாடல் காட்டும் செய்திகளாம். எனவே பாணர் குடியும் பெருமைக்குரிய குடியே அன்றித்தாழ்வுடையது அன்று என அறிக.

## சமயம்:

சங்க காலத்தில் தமிழகத்தில் சைவ, வைணவ, சமண பௌத்த சமயங்கள் நிலவின. இதற்கான சான்றுகள் தொகை நூல்களிலும் பாட்டு நூல்களிலும் பரவலாகக் காணப்படுகின்றன. திருவள்ளுவர், இளங்கோவடிகள் போன்றோர் இன்ன சமயம் என அறுதியிட்டுக்கூறல் இயலாது. ஆனால் அவர்கள் சமயங்களைப் புறக்கணித்தாரும் அல்லர். ஆயின், ஔவையாரின் சமயச் சார்பு, அவர்தம் பாடலால் தெற்றெனப் புலப்படுகிறது. தான் அரிதாகப் பெற்ற நெல்லிக்கனியின் உண்மையான தன்மையை மறைத்து, ஔவையார் நெடிது வாழவேண்டும் என்று விரும்பிய அதியமான் அக்கனியை அவர்க்குக் கொடுத்தான். இவ்வுண்மையை விளக்கும் புறப்பாடல் அடிகள் ஔவையார் சிவபெருமானிடம் ஈடுபாடுடையவர் என்பதை விளக்குகிறது.

*"போரடு திருவின் பொலந்தார் அஞ்சி*
*பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி*
*நீல மணிமிடற்று ஒருவன் போல*
*மன்னுக பெரும நீயே!" (புறம் 91)*

இப்புறநானூற்று அடிகளில் வரும் "நீல மணிமிடற்று ஒருவன்" என்னும் தொடர் நஞ்சுண்டமர்ந்த சிவபெருமானைக் குறிப்பது தெளிவாம். ஆகவே, ஔவையார் சிவநெறியில் ஈடுபாடு கொண்டவர் என்பது பெறப்படும் ஆயின், பிறசமயக் காழ்ப்பு அவர்பால் இல்லை என்பதும் தெளிவு.

## காலம்

இவரது காலம் பெதுவாகக் கடைச் சங்க காலமாகிய கி.பி. 2-ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம். பரணரும் ஔவையாரும் ஏறத்தாழ ஒரே காலத்தவராகலாம். இப்பெருமாட்டியே அதிமானின் புகழை மிகுத்துக்கூறுமிடத்து, அவனைப் பரணரும் பாடினர் எனப் பாடுவதால் இருவரும் சமகாலத்தவராகின்றனர். ஔவையார், கடைச் சங்கத்தின் இறுதிக் கட்டத்தில், அஃதாவது, கி.பி.2ஆம் நூற்றாண்டில்

வாழ்ந்தவராகக் கருதப்படும் பாண்டியன் உக்கிரப் பெரு வழுதியையும் பாடியுள்ளார். இவற்றை நோக்க இப்பெருமாட்டி கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்திருத்தல் வேண்டும்.

## ஒருவரா; இருவரா; பலரா

சில அறிஞர் தமிழகத்தில் ஔவையார் என்ற பெயரில், மூவர் வாழ்ந்துள்ளனர் எனக் கொள்கின்றனர். அவர்தம் கருத்தின்படி, சங்ககால ஔவையார் ஒருவர்; ஆத்திசூடி முதலிய நீதி நூல்கள் பாடிய ஔவையார் மற்றொருவர்; ஒட்டக் கூத்தர், காளமேகம், புகழேந்தி முதலிய புலவர் பெருமக்கள் காலத்தில் உடன் வாழ்ந்த ஔவையார் மூன்றாமவர். சிலர், சாதலை நீக்கும் நெல்லிக்கனி உண்டதால் காலத்தை வென்று வாழ்ந்தாராதலால், எல்லாவற்றையும் பாடியவர் ஒரே ஔவையார்தான் என்பர். இது கற்பனையின் சிகரம் எனத் தள்ளற்பாலதே. தனிப்பாடல் திரட்டில் காணப்படும் பாடல்களும், நீதி நூல் பாடல்களும் சொற்றொடராலும், நோக்காலும், போக்காலும், நடையாலும் மாறுபட்டுள்ளமை எளிதில் அறியமுடியும். இவை எல்லாம் இடைக்காலத்தில் தோன்றியவை. பாடிய பல்வேறு புலவர்கள் தாம் பாடியனவாக வெளிப்படுத்தினால், அவற்றைச் சான்றோர் மதியார் எனக் கருதிப்புகழின் உச்சத்தில் நின்ற இப்பெருமாட்டியின் பெயரையே சூட்டி மகிழ்ந்தனர் எனக்கோடலே தக்கதாம். ஒரு காலத்தில் ஒரு பெருமகன் அல்லது பெருமாட்டி பெருஞ்சிறப்புடன் வாழ்ந்து மறைந்த பின்னர் பல்வேறு காலப்பகுதிகளில் வாழும் அறிஞர் சிலர் மறைந்தவர் பெயர்களைச் சூட்டி மகிழ்வதை இஞ்ஞான்றும் காண்கிறோம் அன்றோ! எனவே, தமிழகத்தில், வள்ளுவர் போல், கம்பர் போல், இளங்கோவைப் போல், சேக்கிழாரைப் போல், புகழேந்தியைப் போல் ஔவையாரும் ஒருவரே எனக் கொள்ளுதலே பொருத்தம் உடைத்தாம். இம்முடிவினை மேலும் ஆராய்தலில் தவறில்லை.

## கல்வியும் கலையும்:

**ஔவையாரின் கல்வி, கலைப் புலமைக்கு அவர்தம்**

பாடல்களே சிறந்து விளங்கும் சான்றுகளாம். தமிழ் மொழிப்புலமையும், ஐந்திலக்கண அறிவும், இயற்கையை நுணித்தறியும் நுட்பமும் உடையவர் இவர். இவரது பாவன்மையும் நாவன்மையும் நாடறிந்தனவே. பயனில் சொல் பாராட்டாமை, வெற்றெனத் தொடுக்காமை, சொற்பொருள் செறிவுடைமை, உலகியல் அறிவு, வேந்தவாம் பண்புடைமை, அஞ்சாமை முதலிய அரிய குணங்கள் இவர்தம் பாடல்களில் தெற்றெனப் புலப்படுமாறு கொண்டு, இவர்தம் கல்வி மேம்பாட்டினை நன்கு அறியமுடியும்.

## இவரால் பாடப்பெற்றோரும் அறியப்பெற்ற நாடுகளும்:

அதியமான் நெடுமான் அஞ்சி, அவன்மகன் பொகுட்டெழினி, தொண்டைமான், நாஞ்சில் வள்ளுவன், பாண்டியன் உக்கிரப்பெருவழுதி, பெருநற்கிள்ளி, சேரன் மாவெண்கோ ஆகியோர் ஆவர். அன்றியும், தம் பாடல்களில் சில இடங்களில், பாரியின் பறம்பு மலைபற்றியும், பரணர் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இவர் தமிழகம் முழுமையும் நன்கறிந்தவர். இவர் செல்லாத நாடில்லை எனலாம். ஒவ்வொரு நாட்டிற்கும் நேரில் சென்று அந்நாட்டின் எல்லை, செல்வர் சிறப்பு, மக்கள் இயல்பு முதலியவற்றை நன்கு அறிந்திருந்தார். சேர சோழ பாண்டிய நாடுகள் என முப்பெரும் பிரிவாக இருந்த தமிழகம் இவர் காலத்திற்கு முன்பே தொண்டை நாட்டின் தோற்றத்தையும் கண்டது. நாஞ்சில் நாடும் அக்காலத்தில் தமிழகத்தின் ஒரு பகுதியே. சோழ நாட்டில் உள்ள கிள்ளி என்பானது வெண்ணி என்ற ஊரையும் அவ்வூரில் உள்ள பொய்கையையும், அதில் பிறழும் மீன்களையும், அவற்றை உண்பதற்கு நேரம் பார்த்திருக்கும் நீர் நாய்களையும், அவ்வூரில் பரந்து கிடக்கும் வயல்வெளிகளையும் இன்ன பிறவற்றையும் பார்த்து மகிழ்ந்துள்ளமை பின்வரும் நற்றிணைப் பாடல் அடிகளால் புலப்படும்.

*"வாளை வாளிற் பிறழ நாளும்*
*பொய்கை நீர் நாய் வைகுதுயில் ஏற்கும்*

*கைவண் கிள்ளி வெண்ணி சூழந்த*
*வயல்வெள் ளாம்பல்"* (நற். 390)

அன்றியும், சேரனது கொல்லிமலை அவருக்குத் தெரியும். அம்மலை அருவிகளின் இன்னோசையைக் கேட்டு மகிழ்ந்துள்ளார்.

*"...............பொறையன்*
*கார்புகன்று எடுத்த சூர்புகல் நனந்தலை*
*மாயிரும் கொல்லி உச்சித் தாஅய்த்*
*ததைந்துசெல் அருவி"*

என்பது அகநானூற்று அறிவிப்பு (303). பாரியின் பறம்பு நாடும் மலையும் அவர் அறிந்து பாராட்டியனவே. தொண்டை நாடு சென்று அந்நாட்டு அரசனிடம் தூதுரைத்துள்ளார். நாஞ்சில் நாடு சென்று அந்நாட்டுப் பெருவள்ளலிடம் பரிசில் பெற்றுத் திரும்பியுள்ளார். மேலும், நாடுகள் அனைத்தும் நேரில் சுற்றிப்பார்த்து அவ்வந்நாடுகளில் அரிதாகக் கிடைக்கும் பொருள்களையும் பற்றிப்பாடியுள்ளார் என்பது,

*"வேழம் உடைத்தும் மலைநாடு; மேதக்க*
*சோழ வளநாடு சோறுடைத்து - பூழியர்கோன்*
*தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயல்தொண்டை*
*நன்னாடு சான்றோர் உடைத்து"*

என்னும் வெண்பாவால் அறியலாகும்.

## பண்பியல்புகள்

ஔவையார் காலத்துப் புலவர் பெருமக்கள் சான்றோர் எனப்பட்டனர். சங்கத்துச் சான்றோர் என்பது மரபாயிற்று. கம்பநாடரும் "சான்றோர் கவி எனக்கிடந்த கோதாவரி" என்று புகழ்ந்துள்ளார். அப்புலவர் பெருமக்கள் மனமாட்சியும், வறுமையிற் செம்மையும் உடையவராகவே வாழ்ந்தனர். அதியமான் ஔவையாருக்குப் பரிசில் நீட்டித்த போது அவர் சினம் கொண்டு, வாயிலோரைப் பார்த்து,

*"எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே"*

என்று கூறியது, அவரது வறுமையிலும் செம்மையாக இருக்கும் மாண்பினைக் கூறியதாகும். மற்றொரு புறநானூற்றுப்

புலவர் பெருமான், ஒருவள்ளலின் பண்பின்மையைச் சுட்டு முகத்தால், "இரவலர் புரவலர் நீயும் அல்லை; புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்." எனத் தனது நெஞ்சமுதத்தை வெளிப்படுத்தியதும் காணலாம்.

பொதுவாக ஒருபெரும் புலவர் மற்றொரு பெரும் புலவரைப் புகழ்ந்துரையார். இது புலமைக் காய்ச்சல் எனப்படும். ஆனால் இதற்கு மாறாகக் கவியரசி ஔவையார் பெரும் புலவர்களான கபிலரையும் பரணரையும் பாராட்டி மகிழ்ந்துள்ளார். அதியமானின் பல்வேறு சிறப்புக்களையும் பலப்பல பாடல்களில் பாரித்து உரைத்த ஔவையார், அவனது புகழுக்கு எல்லையே இல்லை என்று மேலும் புகழ விரும்புகிறார். ஆயின் தன்னொத்த பிறிதொரு புலவர் பெருமான் புகழ்வதே சிறப்புடைத்து என நினைத்து அதியனை நோக்கி, "பெரும, நின்னைப் பாணர் பலரும் பாடியுள்ளனர், இன்றும் பரணன் பாடினன்" எனின் நின் பெருமைதான் என்னே! என அதியனைப் பாராட்டுவார் போல் பரணர் புகழை வியந்துள்ளார் அன்றோ?

பாரி, வள்ளல்களுள் தலைசிறந்தவன்; முல்லைக்குத் தேரையே ஈந்தவன். இவனது உயிர் நண்பர் கபிலர். கபிலர் புகழ்மிக்க பெரும்புலவர். மூவேந்தரும் உடன்று வந்து பறம்பு மலையை முற்றுகையிட்டனர். உள்ளிருக்கும் வீரர்க்கு உணவு கிடைத்திலது. இதனை முன் கூட்டியே உணர்ந்த கபிலர், கிள்ளைகள் பலவற்றை வளர்த்துப் பழக்கினார். காலையில் மலையரணைக்கடந்து, பலகாவதம் பறந்துசென்று, முற்றிய செந்நெற்கதிர்களை கொண்டு, மலையில் மீளுமாறு பணித்தார் அக்கிள்ளைகளும் அவ்வாறே செய்தன. முற்றுகை பயனற்றுப் போயிற்று. கபிலர்தம் இத்தொண்டு மறக்கற் பாலதோ? செயற்கரிய செய்யும் பெரியோரைக் கொண்டாடும் பழக்கமுடைய ஔவையார், தம் பாடல்களில் ஏற்ற இடத்தில் இப்பணியினை எடுத்துக்கூறிக் கபிலரை வாயார வாழ்த்துகின்றார்:

*"பாரி பறம்பின்*
*நிரைபறைக் குரீஇயினம் காலைப் போகி*

*முடங்குபுறச் செந்நெல் தரீஇயர் ஓராங்கு*
*இரைதேர் கொட்பின வாகிப் பொழுது படப்*
*படர்கொள் மாலைப் படர்தந்தாங்கு*
*வருவர் என்று உணர்ந்த மடங்கெழு நெஞ்சம்"*

(அகம். 303)

என்ற அகநானூற்று அடிகளில் தலைவி கூற்றாக வைத்துக் கபிலரைப் பாராட்டியுள்ளார்.

அன்றியும், அரசனுக்கு அரசப்பணி செய்தலும், மாற்றார் நாடும் நகரும் அழிதல் கூடாதே என வருந்திப் போரைத் தவிர்த்தலும், சுற்றம் தழுவுதலும், வேற்றுமை பாராட்டாமையும், நன்றி மறவாமையும், மூவேந்தரும் ஒற்றுமையாக வாழ விரும்பியமையும் தமிழின்பாலும் நாட்டின் பாலும் அவர் கொண்டிருந்த தணியா வேட்கை முதலியனவும் பிற அரிய பண்புகளாம்.

## தூதுபோதல்:

உலக வரலாற்றிலேயே முதன் முதல் ஒரு பெண் மாற்றரசனிடம் தூது சென்றதும், போரைத்தவிர்த்ததும் தமிழகத்தில்தான் நடைபெற்றது. இஃது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. ஔவையார் தான் உலகின் முதல் பெண் தூதர். தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த பெரும் புலவர்களுள் ஔவையார் பெருஞ்சுட்டுக்குரியர். படைச் செருக்கால் அறிவு மயங்கி, போரில் ஈடுபடுத்த நினைந்த தொண்டைமானிடம் சென்று அவனைப் புகழ்வார் போல், தன் அரசன் அஞ்சியின் ஆற்றலைப் புலப்படுத்திய மதி நுட்பம் நூலோடுடைய ஔவையாரை என்னென்று பாராட்டிப் புகழ்ந்துரைப்பது.

*"இவ்வே, பீலியணிந்து மாலை சூட்டிக்*
*கண்திரள் நோன்காழ் திருத்தி நெய்யணிந்து*
*கடியுடை வியன்நக ரவ்வே; அவ்வே,*
*பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து*
*கொல்துறைக் குற்றிலம் மாதோ!*

---------------------------------------

*அண்ணல் எம்கோமான் வைந்நுதி வேலே!'*

என்றும் புறப்பாடல் (95) இதனை மெய்ப்பிக்கும்.

## அறிவுரை கூறல்:

ஒருவனைத் தோற்றத்தால் மட்டில் மதிப்பிடல் தவறு; உள்ளத்தால் வேறாகவும் இருத்தல் கூடும். "மக்களே போல்வர் கயவர்" என்பதனை உன்னுக. மேடோ பள்ளமோ; நாடோ காடோ; குடிசையோ கோபுரமோ; அரண்மனையோ ஆண்டிமடமோ? எது வாயினும் ஆகுக. கவலை இல்லை. அங்கங்கு வாழும் மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை உன்னுக. மக்கள் நல்லவர்களாயின் அவர்கள் உறையும் இடமும் நன்றாம்; மக்கள் பண்பற்ற மாக்களாக மாறினால், அவர்தம் இடமும் கொடிய விலங்குகள் வாழும் காடேயாம். இக்கருத்தினைச் சித்திரிக்கிறார் ஔவையார்.

*"நாடாகு ஒன்றோ; காடாகு ஒன்றோ;*
*அவலாகு ஒன்றோ; மிசையாகு ஒன்றோ;*
*எவ்வழி நல்லவர் ஆடவர்*
*அவ்வழி நல்லை வாழிய நிலனே"* (புறம். 187)

என்பது அவர்தம் தேற்றம் மக்களே! மக்கள் தலைவர்களே! உங்கள் நாடும் நகரும்; ஊரும் பாரும் உயர்ந்ததா? தாழ்ந்ததா? என்பது உங்கள் கையில் உள்ளது; உங்கள் நடத்தையில் உள்ளது. நீங்கள் நேர்மையாகவும் அறவுணர்வுடையோராகவும், பழிக்கு அஞ்சுவோராகவும், மக்கட் பண்புடையோராகவும் இருந்தால், உங்கள் நாடும் நல்ல நாடாகும்; மாறாக, நீங்கள் ஒழுக்கத்திற்கு விடை கொடுத்து விட்டு, நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் இன்றி, வஞ்சனை செய்வீராகில் நாடு பாழாகும்; மக்கள் நிலை குலைவர்; கொள்ளை, கொலை, வன்முறை, முதலிய சமூகக் கேடுகள் நடனமாடும். விழிமின்; எழுமின்; வாழுமின்; வாழ விடுமின்! என்று அறிவுறுத்துகிறார் ஔவையார்.

## எடுத்தாண்ட உவமைகள்

ஆங்கில இலக்கியத்தில் ஆழங்கால்பட்ட அறிஞர் சிலர், ராட்லி, கோல்டு சுமித்து போன்றோர் அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுத்தாண்ட உவமைகளின் அழகை வானளாவப் புகழ்ந்துரைக்கின்றனர். வருந்துவோம் அல்லோம்;

வாழ்த்துவோம். ஆயின், தமிழ் இலக்கிய உலகில் செறிந்து, நிறைந்து, கிடக்கும் - கிடைக்கும் - உவமைகளைச் சிந்திப்பார்களானால், அவர்கள் வியப்பார் உவமைகளுள் ஔவையார் ஆண்ட உவமைகள் சிலவற்றை ஈண்டைக்கு எடுத்துக்காட்டுவோம்.

*"பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி*
*நீலமணி மிடற்று ஒருவன் போல*
*மன்னுக பெரும"* (புறம் 91)

ஆதலைத் தன்னகத்து அடக்கி ஔவையின் சாதல் நீங்க அதியன் அளித்த நெல்லிக்கனி தொடர்பாக வருவது இவ்வுமை. சிவபெருமான் போல அதியன் என்றும் வாழவேண்டும் என்று கருதுகிறார் ஔவையார். ஆனால், அதியனோ தன்னைவிட ஔவையார் நெடிது வாழ்ந்து சமுதாயத்திற்குப் பயன்படல் வேண்டும் என எண்ணியே நெல்லிக்கனியைத் தான் உண்ணாது, அப்பெருமாட்டிக்கு அளித்தான். திருப்பாற்கடலைத் தேவர்கள் கடைந்த போது முதலில் வந்தது நஞ்சு, அது கண்டு அஞ்சிய தேவர்களுக்கு அபயம் தரமுனைந்த சிவபெருமான், அந்நஞ்சினைத் தானே உண்டு, பின்வந்த அமிழ்தத்தை தேவர்கட்கு அளித்தார் என்பது புராணம் அதனால் சிவனுக்கு நஞ்சுண்ட கண்டன் என்பது ஒரு பெயராயிற்று. இந்நிகழ்ச்சியில், கேட்டினைத் தானே தாங்கிக் கொண்டு, வாழ்வினைப் பிறர்க்கு அளித்த சிவபெருமான் செயல்போல், அதியமானும் நெடுநாள் தான் வாழும் ஆசையை வெறுத்து, ஔவையார்க்கு அளித்தான். ஆதலால் அதியமான் நீலகண்டனுக்கு நிகராயினன். நீண்டநாள் வாழ்வதை அதியமான் வெறுத்தானாயினும், அவன் நெடிது வாழ்வன்; அவன் வாழவேண்டும் என்று அவனுக்கு வாழ்த்துக் கூறியுள்ளார் ஔவையார். இதனால், அதியன் தன்னலந்து றந்தவன் என்பது பெறப்படும். ஆனால், உவமை அதனுடன் முடியாமல் "பால்புரை பிறைநுதல் சென்னி" என்ற மற்றொரு சிறப்பினையும் சிவனுக்கு ஏற்றியுள்ளார் அப்பெருமாட்டி. அவ்வாறு சிவனை விசேடித்துக் கூறியதால், துன்பத்தால் தேய்ந்து வந்தோரை தலையில் வைத்துப் போற்றிக்காக்கும் பெற்றியன் அதியன் என அவனது பண்பையும் குறிப்பாராயினர்.

இவ்வாறு, பின்வரும் சில உவமைகளுக்கும் விரிவும் விளக்கமும் தரலாம். ஆயின், விரிவஞ்சி உவமைகளை மட்டில் தருவதுடன் அமைகிறேன்.

(அ) "வைகல், எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த காலன்னோனே" (புறம் 87)

(ஆ) "எறிகோல் அஞ்சா அரவின் அன்ன
சிறுவல் மறவரும் உளரே" (புறம் 89)

(இ) "ஊர்க்குறுமாக்கள் வெண்கோடு கழா அலின்
நீர்த்துறைப் படியும் பெரும் களிறுபோல
இனியை"..... அதன்
துன்னரும் கடா அம் போல.
இன்னாய் பெரும" (புறம் 94)

(ஈ) "வரிவயம் பொருத வயக்களிறு போல
இன்னும் மாறாது சினனே" (புறம் 100)

(உ) "..........................யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத்தது அது பொய்யாகதே" (புறம் 101)

(ஊ) "..................................உமணர்
கீழ்மரத்து யாத்த சேம அச்சு அன்ன
இசைவிளங்கு கவிகை நெடியோய் திங்கள்
நாள் நிறை மதியத்து அனையை" (புறம் 102)

இவ்வடிகளுக்குப் பழைய உரைகாரர் பின்வருமாறு விளக்கம் தருகிறார் திங்கள் நாள் நிறை மதியத்து அனையை என்றது, அறிவும் நிறைவும் அருளும் முதலாகிய குணங்களால் அமைந்தாய் என்றவாறாம். (பொகுட்டெழினி). "சேம அச்சு அன்ன" என்றது, ஏற்ற இழிவு உடையவழி அச்சு முறிந்துழிச் சேம அச்சு உதவினாற்போல நீகாக்கின்ற நாட்டிற்கு ஓர் இடையூறு உற்றால், அது நீக்கிக் காத்தற்கு உரியை என்பதாம் (சேம அச்சு - காவலாகிய அச்சு)

(எ) "ஊர்க்குறு மாக்கள் ஆடக்கலங்கும்
தாள்படு சின்னீர்க் களிறட்டு வீழ்க்கும்
ஈர்ப்புடைக் கராத் தன்ன" (புறம் 104) (எழினி)

(ஏ) "மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்

மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே" (புறம் 206)

இதற்குப் பழைய உரைகாரர், "கைத்தொழில் வல்ல தச்சர் சிறார் மழுவுடன் காட்டகத்துச் சென்றால், அக்காட்டகம் பயன்படுமாறு எத்தன்மைத்து, எமக்கும் யாதொரு திசைக்கண் போயினும் அத்திசைக்கண் சோறு அத்தன்மைத்து" என விளக்குவர். இங்கு, பரிசிலர்க்கு சிறாரும், கல்விக்கு மழுவும், செல்லும் திசைக்குக் காடும், சோற்றிற்கு காட்டுள் மரமும் உவமையாகக் கொள்க.

(ஐ) "இல்சிறைச் செரீஇய ஞெலி கோல் போலத்
தோன்றாது இருக்கவும் வல்லன்; மற்றதன்
கான்றுபடு கனைஎரி போலத்
தோன்றவும் வல்லன்" தான் தோன்றும் காலே"
(புறம் 315)

அஃதாவது, ஒருவன் வீட்டின் இறப்பில் செருகப்பட்ட தீக்கடை கோலைப் போலத் தன்வலி வெளிப்பட வேண்டாத காலத்து அடங்கி இருக்கவும் வல்லன்; ஞெலிகோலாலே கக்கப்பட்டுத் தோன்றுகின்ற காட்டுத் தீயைப் போல வெளிப்படத் தோன்ற வேண்டிய காலத்துத் தோன்றவும் வல்லன் என்பதாம்.

மேற்கூறிய உவமைகளைச் சிந்திப்பின் ஔவையாரது பரந்துபட்ட உலகியல் அறிவும், பொருள் விளக்கம் செய்யும் கலைத்திறனும் வியந்து வியந்து மகிழத்தகு மன்றோ? இவை எல்லாம் இயல்பான - இயற்கை இறவாத - வாழ்வியலை ஒட்டிய உவமைகள் என்பது உன்னுக. திருவள்ளுவரும் இங்ஙனமே எடுத்து விளக்குவர் அன்றோ?

## முடிவுரை:

இதுகாறும் ஔவையாரின் பாடல்கள் காட்டும் அகச் சான்றுகளின் அடிப்படையில் அவரது வரலாற்றின் பல்வேறு கூறுகளைக் கண்டோம். அவற்றை எல்லாம் ஒருவாறு தொகுத்துக் கூறி இக்கட்டுரை முடிப்பல் ஔவையார் வாழ்ந்த சங்ககாலத்தில் சேர நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய தகடூர் என்னும் ஊரில் அதியமான் நெடுமான் அஞ்சி என்பான் அரசு செய்துவந்தான். அவனிடம் மழவர் என்னும் வீரம் செறிந்த

ஒருவகைப் படைப்பிரிவினர் இருந்தனர். அவ்வரசன் பால் ஔவையார் பெருமதிப்புக் கொண்டு, அவைக்களப் புலவராக அமர்ந்தார். அவனுடைய பல்வேறுபட்ட இயல்புகளையும் பாராட்டி மகிழ்ந்தார். ஒருநாள் அதியமான் ஒருமலைப் பக்கத்தில் அரிதாகக் கிடைத்த நெல்லிக்கனி ஒன்றை ஔவையாருக்கு ஈந்து அவரை நெடிது வாழ வைத்தான். அக்காலம் காஞ்சி நகரை ஆண்டு கொண்டிருந்த தொண்டைமான் என்னும் அரசன் தன் படைவலி காரணமாக அதியமானைத் தன்னினும் மெலியனாகக் கருதிப் பொருதற்கு சமயம் பார்த்திருந்தான். அதனை உணர்ந்த அதியன், தொண்டைமானுக்கு அறிவு கொளுத்தும் ஆற்றல் ஔவையாருக்கே உண்டு எனக் கருதியவனாய் அவரைத் தூதுவிடுத்தான். அஞ்சா நெஞ்சம்படைத்த ஔவையார் அவன் படைக் கொட்டிலைப் பார்வையிட்டு, அவனைப் புகழ்வார் போல் இகழ்ந்து நாணச் செய்து தொண்டைமானின் செருக்கை அடக்கினார்.

பின்னர் ஒருநாள் திருக்கோவலூரை ஆண்ட மலையமான் திருமுடிக்காரி ஆணவத்தால் தன்னை வெல்வார் யார் எனச் செருக்கோடு இருந்தான். பகைமுற்றவே அதியனுக்கும் காரிக்கும் கடும் போர் தொடங்கும் நிலை ஏற்பட்டது. அது போது போரினால் ஏற்படும் அழிவைக்காரிக்கு உணர்த்தினார் இப்பெருமாட்டி. அவன் கேளானாகி, அதியனொடு பொருது கோவலூரை இழந்தான். அப்போது அதியனின் வீரத்தையும் வெற்றியையும் ஔவையார் பலபாடல்கள் மூலம் பலபடப் பாராட்டி மகிழ்ந்தார்.

இந்நிலையில் அதியனுக்கு ஒரு மகவு பிறந்தது. அம்மகவே பொகுட்டெழினி என்னும் இளவரசன் ஆவன். இஃது இவ்வாறாக, கோவலூரை இழந்த மலையமான் தன் துணை அரசனாகிய சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறையை உடன்சேர்த்துக் கொண்டு அதியமானை எதிர்த்தான். அதியமான்தன் நட்பரசராகிய சோழ பாண்டியரை சேர்த்துக் கொண்டு மலையனொடு பொருதான். போர் மிகவும் கடுமையாக நடந்தது. பெருவீரனாகிய அதியமான் எதிர்பாரா வகையில்

பகைவர்தம் படைக்கலத்திற்கு இரையாகி மடிந்தான். அந்நிலையில் ஔவையார் அதியனை இழந்தமையைப் பொறுக்கலாற்றாது அவன் மீது கையறு நிலை பாடித்தன் நன்றிக்கடனை முடித்தார்.

அதியன் இறந்த பின்னர், அவன்மகன் பொகுட்டெழினி முடி சூடினான். இளைஞனாகிய அவனுக்கு ஔவையார் அருகிருந்து அரசியல் சகடம் இடையூறின்றிச் செலுத்த உதவி புரிந்தார். அந்நிலையில் ஔவையார் தகடூரை நீங்கி, நாடு பல காணும் நாட்டத்தால் புறப்பட்டு, நாஞ்சில் மலைத் தலைவனாகிய நாஞ்சில் வள்ளுவனைக் கண்டு மகிழ்ந்து, அவனது அரவணைப்பால் பன்னாள் தங்கியிருந்தார். பின்னர்ச் சோணாடு முதலிய நர்டுகளுக்குச் சென்று அரசர் மதிக்க ஆண்டுச் சின்னாள் தங்கினார். இங்ஙனம், மன்னரும் புலவரும் உவக்குமாறு பல்லாண்டுகள் வாழ்ந்து, முதுமை அடைந்த நிலையிலும், பாக்கள் பல பாடித் தமிழ் அன்னையை அணி செய்து புகழுடம்பை நிறுவிப் பூத உடலை நீத்தார். ஔவையார் மறைந்தார்; ஆயின் அவர்தம் பாடல்கள் மறையவில்லை; என்றும் மறையாமல் நின்று அவர் புகழ்பாடும்.

*நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினும் நூற்சேலை*
*நாற்றிங்கள் நாளுக்குள் நைந்துவிடும் - மாற்றலரைப்*
*பொன்றப் பொருதடக்கைப் போர்வேல் அகளங்கா*
*என்றும் கிழியாதென் பாட்டு.*

- ஔவையார் சோழனுக்குப் பாடியது.

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். இ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. ✆ 2532879

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 2341116